வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433 076 284 4443
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 18.04.2024 வியாழக்கிழமை இதழ் : 109 பக்கங்கள் : 12


# கடன் மறுசீரமைப்பு இணக்கம் வெளிப்படை தன்மை அவசியம்!

## வலியுறுத்துகிறது ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, ஏப்ரல் 18

**கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால், அது முழுமையாக இடம்பெறத் தேவையில்லை. எனினும், சர்வதேச கடன் வழங்குநர்களுடன் எட்டப்படும் இணக்கப்பாட்டு ஒப்பந்தங்களில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையை பேண வேண்டும் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவரின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச கடன் வழங்குநர்களுடனான பேச்சுகள் நிறைவடைந்துள்ளன என்றஅரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஏப்ரலுக்குள் பேச்சுகளை நிறைவு செய்து, ஆயிரத்து 270 கோடி டொலர் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 3 இலட்சத்து 83 ஆயிரத்து 191 கோடி ரூபாய்கடன் தொகையை மறுசீரமைப்பதற்கான இணக்கப்பாட்டை எட்டுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

அரசியலுக்கு அப்பால் சென்று நாம் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். யார் பேச்சுகளை முன்னெடுத்தாலும்,

11

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

## 5ஆவது ஆண்டு நினைவேந்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி!

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தல் நாளை மறுதினம் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளன.

குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்ற கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார், நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயங்களை மையப்படுத்தி பிரதான நினைவேந்தல் நிகழ்வு கள் நடைபெறவுள்ளன.

நினைவேந்தலை முன்னிட்டு தாக்குதல்கள்

11

## கப்பல் கவிழ்ந்ததில் கடலில் தவித்த 21 இலங்கையர் காப்பற்றப்பட்டனர்!

மஸ்கட், ஏப். 18

ஓமான் வளைகுடா கடலில் கடும் புயலில் சிக்கி கவிழ்ந்த கப்பலில் பயணித்த 21 இலங்கை பணியாளர்களை ஈரானிய அவசர சேவைகள் பிரிவு காப்பாற்றியது.

குக் தீவுகளின் கொடியுடன் எண்ணெய் ஏற்றிச்சென்ற கப்பல் தெற்கு நகரமான ஜாஸ்கிலிருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் கவிழ்ந்ததாக ஐ. ஆர். என். ஏ. செய்தி நிறுவனம் அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

ஒரு மீட்பு கப்பல் அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டு 21 பணியாளர்கள் காப்பாற்றப்பட்டனர் என்று ஜாஸ்க் துறைமுகங்கள் மற்றும் கடல்சார் நிர்வாகத்தின் இயக்குநர் முகமது அமீன் அமானி தெரிவித்தார். (எ)

## ஈஸ்டர் தாக்குதல் சிறில் காமினிக்கு சி. ஐ. டி அழைப்பு

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோவை குற்றப்புலனாய்வு பிரிவினர் நாளை விசாரணைக்கு முன்னி லையாகுமாறு அழைத் துள்ளனர்.

கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளரும் "ஞானார்த்த பிரதீப்யா" என்ற சிங்கள கத்தோலிக்க

11

## சுதந்திர கட்சியின் ஆட்சியையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஏப். 18

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் ஆட்சியையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று நீதி, சிறைச் சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் சிறீமாவோ பண்டார நாயக்கவின் 108ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறீமாவோ பண்டார நாயக்கவுக்கு பல்வேறு சவால்கள் காணப்பட்டன. ஒரு சிலர் அவருக்கு சிறைத் தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என செயல்பட்டனர். எனினும், அவர் மிகச் சிறப்பாக பணியாற்றினார்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை மீண்டும் மலர செய்ய வேண்டும் என்பதே அவரின் நோக்கமாக இருந்தது. இந்தக் கட்சி நாட்டின் அனைத்துப்

11

## பண்டிதர் கடம்பேசுவரன் இயற்கை எய்தினார்!



யாழ்ப்பாணம், ஏப். 18

ஈழத்தின் மூத்த தமிழ் அறிஞரும் தமிழ் மரபுவழி கல்வியியலாளருமான பண்டிதர் ம. ந. கடம்பேசுவரன் (வயது 78) காலமானார்.

வட்டுக்கோட்டை - சிந்து புரத்தை பிறப்பிடமாகக் கொண்ட அவர் நேற்று

11



## மடு மாதாவின் சொரூபம் நெல்லியடியை அடைந்தது

வடமராட்சி, ஏப். 18

மன்னார் - மருதமடு மாதாவின் திருச்சொரூப பவனி நேற்று நெல்லியடி - கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தை வந்தடைந்தது.

மாலை 5 மணியவில் வந்த மடு அன்னைக்கு மத பேதமின்றி வீதியின் கரையில் நின்று மக்கள் வரவேற்பு அளித்தனர். அத்துடன், பெருந்திரளான மக்கள் அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடாற்றினர்.

இன்று காலை 7 மணிக்கு அந்தோனியார் ஆலயத்தில் இருந்து பவனியை ஆரம்பிக்கும் அன்னை, பருத்தித் துறை சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆல யத்தை அடைவார். காலை 8. 00

11

### பிணைமுறி மறுசீரமைப்பு:

## பத்திர உரிமையாளர்களுடன் தொடர்ந்து பேச்சு நடத்துவோம்

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான்

கொழும்பு, ஏப். 18

சர்வதேச இறையாண்மை பிணைமுறி பத்திரங்களை மறுசீரமைப்பது தொடர்பாக பத்திர உரிமையாளர்களுடன் உடன்பாடு எட்டப்படுவதற்காக தொடர்ந்து கலந்துரையாடல்களை நடத்த எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர்கள், கடன் மறுசீரமைப்பு பேச்சில்

11

## குறுந்தகவல் தொடர்பில் அவதானமாக இருங்கள்

கொழும்பு, ஏப். 18

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருந்து பொதிகள் கிடைத்துள்ளன என்று தெரிவித்து குறுந்தகவல் ஊடாக வாடிக்கையாளர்களின் கடனட்டை தொடர்பான தகவல்களைப் பெறும் மோசடி குறித்து அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடி சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பித்துள்ளன என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

11

## சுதந்திர கட்சி தலைமை யார் வசமாகும்? தீர்மானிக்கப் போகும் வழக்கு இன்று!

கொழும்பு, ஏப். 18

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமை தொடர்பாக சந்திரிகா குமாரதுங்க தொடுத்த வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் இன்று விசாரணைக்கு வருகின்றது.

சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் பதவிக்கு மைத்திரிபால சிறிசேன தகுதியற்றவர். அவரை பதவி நீக்க உத்தரவிடக் கோரி அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க நீதிமன்றில் கடந்த

11


உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் நடந்துவருகின்றன. தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்பது ஒருவரை வெல்ல வைப்பதற்கானது என்றும் பொது வேட்பாளர் என்பது அப்படியல்ல எனவும் அண்மையில் "ஈழநாடு" ஆசிரியர் தனது தலையங்கம் ஒன்றில் விபரித்திருந்தார்.

அதுகுறித்து அறிந்துகொள்ள விரும்பிய நண்பர் ஒருவர், "பகிஷ்கரிப்பதால் மாத்திரமல்ல, பொது வேட்பாளரை நிறுத்தினாலும் ஒரு வேட்பாளர்தானே பயன்பெறுவார்", என்று வாதிட்டார்.

இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு தேர்தலில் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை பகிஷ்கரிக்கக் கோரியதால் ரணிலுக்கு கிடைக்கவிருந்த வாக்குகள் அவருக்குக் கிடைக்காமல் விட்டன. அதனால் ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றார். அதேபோல, அந்தத் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களின் வாக்குகள் பொதுவேட்பாளருக்கு கிடைத்திருந்தாலும் மகிந்த ராஜபக்ஷதானே அதே ஒரு இலட்சம் வாக்குகளால் வெற்றிபெற்றிருப்பார் என்ற அவரின் வாதம் கேட்கின்றபோது சரியாகத்தான் இருந்தது. ஆனால், அப்படியல்ல என்று நண்பருக்கு விளக்கமளிக்க வேண்டியிருந்தது.

அந்தத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பெற்ற வாக்குகள் 48 இலட்சத்து 87 ஆயிரத்து 152. ரணில் விக்கிரமசிங்க பெற்ற வாக்குகள் 47 இலட்சத்து 6 ஆயிரத்து 368. அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 95 இலட்சத்து 93 ஆயிரத்து 520. வெற்றிபெற எடுக்கவேண்டியது 47 இலட்சத்து 96 ஆயிரத்து 760 வாக்குகள்தான். மகிந்த ராஜபக்ஷ ஐம்பது வீத வாக்குகளிலும் பார்க்க அதிகம் பெற்றார் - வெற்றிபெற்றுவிட்டார். அதாவது, தேர்தல் பகிஷ்கரிப்பு அவருக்கு நேரடியாக உதவியிருக்கின்றது. ஆனால், அந்தத் தேர்தலில் தமிழ் பொது வேட்பளர் ஒருவரைக் களம் இறக்கியிருந்தால் அவர் ஆகக் குறைந்தது இரண்டு இலட்சம் வாக்குகளையே பெற்றிருப்பார். என்றாலும், அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 97 இலட்சத்து 93 ஆயிரத்து 520 சக (+) 2 இலட்சம் மொத்தம் 97 இலட்சத்து 93 ஆயிரத்து 520 ஆகியிருக்கும். இப்போது ஒருவர் வெற்றிபெற தேவையானது 48 இலட்சத்து 96 ஆயிரத்து 760 வாக்குகள். ஆனால், மகிந்த பெற்ற வாக்குகளோ 48 இலட்சத்து 87 ஆயிரத்து 152 வாக்குகள்தான். அவர் வெற்றி பெற்றிருக்க முடியாது. இரண்டாவது சுற்றுக்காக வாக்குகளில் யாராவது தமது இரண்டாவது தெரிவாக யாரையேனும் தெரிவு செய்திருக்கிறார்களா? என்பது கணக்கிடப்பட்டிருக்கும். அப்போது, தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களித்தவர்கள் தமது இரண்டாவது தெரிவாக ரணிலுக்கு வாக்களித்தால் அவர் 49 இலட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருப்பார். தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வது அவர் ஜனாதிபதியாக வருவதற்காக அல்ல என்பது ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுவிட்ட முடிவுதான். ஆனால், மக்கள் தமது விருப்பப்படி இந்த நாட்டின் ஜனாதிபதியாக தாம் விரும்பிய ஒருவரை தெரிவுசெய்யவும் நாம் சந்தர்ப்பம் கொடுத்தால் அது யார் என்பதையும் அவர்களே தத்தம் விருப்பத்துக்கு விட்டுவிடவேண்டும். அப்படி விடுகின்றபோது அவர்களின் விருப்பமே ஒருவரின் வெற்றியைத் தீர்மானிக்கும்.

இரண்டாயிரத்து பதினைந்தில் நேரடியாக மைத்திரிபால சிறிசேனவுக்கு நாம் வாக்களித்திருந்தபோதிலும் அது மாத்திரமே அவரின் வெற்றிக்கு உதவியது என்று வாதிடுவதைவிட மேலே நமது விருப்பு வாக்கின் மூலம் மட்டுமே தெரிவாகின்றபோது அவருக்கும் ஒரு கடப்பாடு அவரை அறியாமலே வந்துவிடலாம்.!

நண்பருக்கு இதனை விளக்கமளித்தபோது அவர் திருப்தியுடன் அழைப்பிலிருந்து விடுபட்டார்.

அந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னதாக ரணில் பிரதமராக இருந்தபோது தொடங்கிய சமாதானப் பேச்சுகளை முறிக்கவேண்டும் என்பதே விடுதலைப் புலிகளின் ஒரே இலக்காக இருந்திருக்கவேண்டும். அதனால்தான் அவர்கள் அவரைத் தோற்கடிக்க பகிஷ்கரிப்பை கையில் எடுத்தார்கள். தாம் விரும்பிய ஒருவரை தோற்கடிப்பது என்பதும் மற்றையவரை வெல்ல வைக்கவேண்டும் என்பதும் ஒன்றானதே. அதனால்தான் இப்போது பகிஷ்கரிக்கவேண்டும் என்பவர்கள் எதற்காக அதனை முன்வைக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள அரசியலில் கலாநிதி பட்டம் எல்லாம் தேவையில்லை. இன்று ஜே. வி. பி. வெற்றி பெறவேண்டும் என்று இந்த நாட்டில் தீவிரமாக பணியாற்றுபவர்கள் யார் என்பதும் ஒன்றும் இரகசியமானதல்ல. சீனாவின் செல்லப்பிள்ளைகளான அவர்களுக்கு தமிழ் வாக்குகள் கிடைக்காது என்பதும் தெரிந்ததுதான். வடக்கில் பாராளுமன்றத் தேர்தலில் சில நூறு வாக்குகளைப் பெற்ற அவர்களுக்கு அந்த ஜனாதிபதித் தேர்தலில் சில ஆயிரங்கள் வேண்டுமானால் கிடைக்கலாம். தமிழ் மக்களை அவர்களுக்கு வாக்களியுங்கள் என்று கேட்பதைவிட, தேர்தலை பகிஷ்கரியுங்கள் என்று கேட்பது அவர்களுக்கு உதவும் என்பதும் அவர்களுக்குத் தெரிந்ததுதான்.

பொது வேட்பாளரை களம் இறக்கவேண்டும் என்பவர்களுக்குப் பின்னால், இந்தியாவின் நிகழ்ச்சிநிரல் இருப்பதாகக் கூறுபவர்கள் இந்த பகிஷ்கரிப்பின் பின்னால் சீனா இல்லை என்பதையும் அல்லவா நிரூபிக்கவேண்டும்.!

அதனால்தான், பொது வேட்பாளர் போட்டியிட வேண்டும் என்று வாதிடுபவர்கள் அனைவருமே பகிஷ்கரிப்புக்கு எதிராகக் கருத்துக் கூறிவருகின்றனர்.

**- ஊர்க்குருவி.**

# அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்

## கஜேந்திரன் எம். பி. கோரிக்கை

வெலிக்கடை, ஏப். 18

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணனைச் சந்தித்து உரையாடியிருந்தேன்.

அவர் கடந்த 26. 03. 2024 இல் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டு அன்றைய தினமே கைது செய்யப்பட்டு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் (வெலிக்கடையில்) அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முகநூலில் கடந்த 2020 இல் ஒரு படமும் 2022 இல் ஒருபடமும் பகிரப்பட்டதாகவும் அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கம் செய்யும் முயற்சி என்ற பொய்க் குற்றச்சாட்டினைச் சுமத்தி அவரைத் தடுத்துவைத்துள்ளனர். ஏற்கனவே அவர் சுமார் 9 ஆண்டுகள் கொடிய சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கும் பல பொய் வழக்குகளுக்கும் முகம் கொடுத்து விடுதலையாகி தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலையில் மீண்டும் கைது செய்யப்பட்டு கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ளார்.

அடிப்படை வசதிகள் மிகவும் மோசமாகவுள்ள சுமார் 400 பேர் மாத்திரம் அடைக்கப்படக்கூடிய வெலிக்கடை விளக்கமறியல் சிறையில் 2,286 பேருடன் அடைத்துவைக்கப்பட்டுள்ளார்.

அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையில் அவரைச் சந்தித்து உரையாடியிருந்தேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கச் சீருடையிலுள்ள படத்தை முகநூலில் பகிர்ந்ததாகக் குற்றஞ்சுமத்தி அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டதாக கைது செய்து சிறையில் அடைத்து வைத்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் அடுத்த தடவை எப்போது நீதிமன்றில் முற்படுத்துவார்கள் என்ற திகதி கூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளதாகவும் கூறினார். தன்னைக் கைது செய்து அடைத்துள்ளமையால் தனது பிள்ளைகள் அநாதரவான நிலையில் இருப்பதாகவும் தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் மிகுந்த வேதனை வெளியிட்டார்.

கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களது குரல்வளையை நசுக்கி தமிழர்களை தமது கொத்தடிமைகளாக வைத்துக் கொள்வதற்கான எல்லையற்ற அதிகாரத்தை பொலிஸாருக்கு வழங்கியுள்ளது. பொலிஸார் இனவாதமாகவே செயல்படுகின்றனர். புலிகள் மீளுருவாக்கம் என்ற பொய்க்குற்றச்சாட்டுக்களின் கீழ் ஆனந்தவர்ணன் கைது செய்யப்பட்டுள்ளமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆனந்தவர்ணன் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும். அத்துடன் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படல் வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றோம். அச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டுமெனவும் கோருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# சிறிமாவோ பண்டாரநாயக்கவின் 108ஆவது பிறந்த நாள் நிகழ்வு!

கொழும்பு, ஏப். 18

உலகின் முதல் பிரதமரான மறைந்த சிறிமாவோ பண்டாரநாயக்கவின் 108 ஆவது பிறந்தநாள் விழா கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

வைபவத்தின் பிரதான நினைவு உரையை நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நிகழ்த்தினார்.

சிறிமாவோ பண்டார நாயக்க மகளிர் சங்கத்தின் ஏற்பாட்டில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, சிறீ



லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் திலங்க சுமதிபால உள்ளிட்டோர் இங்கு கருத்து தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவண்ண, ஜகத் புஷ்பகுமார, கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கால்வாயில் கவிழ்ந்து விபத்தில் சிக்கிய வான்

பொலநறுவை, ஏப். 18

இசைக்குழுவினரை ஏற்றிச்சென்ற வான் ஒன்று கால்வாயில் வீழ்ந்து விபத்தில் சிக்கியது.

பொலநறுவை எஃபெக்ட் இசைக்குழுவினரை ஏற்றிச்சென்ற வானே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் இசைக்குழுவினர் எவ ருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால், வான் கடுமையாகச் சேதமடைந்தது.

குறித்த இசைக்குழுவின் கலைஞர் ஒருவரே வானை ஓட்டிச் சென் றுள்ளார். இந்த நிலையில் சாரதி உறங்கியதாலேயே விபத்து நேர்ந்ததாக தெரியவருகிறது.

நேற்று அதிகாலை பொலநறுவை ஓனேகம மெதமலுவ பிரதேசத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டது.

(எ)



ஈழநாடு
Eelanadu
18.04.2024 வியாழக்கிழமை
ඊළනාඩු
குரோதி வருடம், சித்திரை 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேசுவதற்கான தகுதி!

மீனவர் பிரச்னை தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துடனேயே பேச வேண்டுமென்று தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். இரண்டு நாடுகள் தொடர்பான விவகாரத்தில் இந்திய மத்திய அரசாங்கத்துடன்தான் பேச வேண்டும். அது சரியான கருத்துத்தான் ஆனால், இந்திய மத்திய அரசாங்கத்தை நெருங்குவதற்கான ஒரு கதவாக தமிழ்நாடே வரலாற்றுரீதியாக இருந்திருக்கின்றது. இந்த நிலையில், ஈழத் தமிழர்கள் என்னும் அடிப்படையில் தமிழ்நாட்டை புறந்தள்ளியும் செயல்பட முடியாது. ஆனால், இங்கு பிரச்னையோ வேறு. வடக்கு மீனவர்கள் தொடர்ந்தும் இந்திய மீனவர்கள்மீது குற்றஞ்சாட்டி வருகின்றனர். இதேவேளை, தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படைமீது குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், இந்திய தேர்தல் பிரசாரங்களில் கச்சதீவு விவகாரம் ஒரு பேசுபொருளாகியிருக்கின்றது. அது ஒரு தேர்தல் கோஷமாகவே அடங்கிவிடும். ஏனெனில், கச்சதீவை மீளவும் இந்தியாவின் கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டும் என்னும் கோரிக்கை தமிழ் நாட்டு அரசாங்கங்களால் காலத்துக்குக் காலம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தேர்தல் பிரசாரங்களில் அது ஒரு பிரதான பேசுபொருளாகியிருக்கின்றது.

இது தொடர்பில் இந்திய உச்சநீதிமன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டது. வழக்கில், இந்திய மத்திய அரசின் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர், கச்சதீவு இரண்டு நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உடன்பாட்டின் அடிப்படையில் கையளிக்கப்பட்ட விடயமாகும். அதனை மீளவும் பெற வேண்டுமாயின், யுத்தம்தான் செய்ய வேண்டுமென்று கூறியிருந்ததை இந்திய ஊடகங்கள் செய்தியிட்டிருந்தன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கச்சதீவு விவகாரம் தேர்தலுக்கு பின்னர் எவ்வாறான அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்பது கேள்விக்குறியாகும்.

கச்சதீவு விவகாரத்துக்கு அப்பால், தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் வடபுல மீனவர்களுக்குமான முறுகல் நிலை தொடரத்தான் போகின்றது - இந்த நிலையில், இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேசி பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டியது கட்டாயமானதுதான் - ஆனால், அதனை யார் முன்னெடுப்பது? அதற்கான தகுதிநிலையுடன் எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியாவது இருக்கின்றதா?

முதலில் இந்தக் கேள்விக்கான பதில் தொடர்பில் சுமந்திரன் போன்றவர்கள் சிந்திக்க வேண்டும். ஏனெனில், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா. சம்பந்தன் உதாசீனம் செய்திருந்தார். அதற்கு சம்பந்தன் கூறியிருந்த காரணம் இந்திய பிரதமரை அவமதிப்பதாக அமைந்திருந்தது. இதனை அப்போது பலரும் சரியாக புரிந்து கொண்டிருக்கவில்லை.

உண்மையில் அது ஓர் அவமானப்படுத்தல்தான். ஏனெனில், பிரதமர் மோடியின் அழைப்புக்கு சம்பந்தன் கூறியிருந்த காரணம் ஒரு படிப்பறிவில்லாதவர்கூட கூறுவதற்கு யோசிக்கும் பதிலாகும். அதவாது, மாவை சேனாதிராசாவின் (தமிழ் அரசு கட்சியின் தலைவர்) மகனுக்கு திருமணம். அதனால் பிறிதொரு திகதியை தருமாறு சம்பந்தன் இந்தியத் தூதரகத்துக்கு தெரியப்படுத்தியிருந்தார். ஓர் இனத்தின் தலைவருக்கு இந்திய தேசத்தின் தலைவர் அழைப்பு விடுக்கின்றார் - ஆனால், அந்தத் தலைவரோ திருமணத்துக்கு செல்வது தொடர்பில் பேசியிருக்கின்றார் என்றால் தமிழ் தலைவர்களின் புத்திக்கூர்மையை எவ்வாறு நோக்கப்பட்டிருக்கும்?

ஒருபுறம், சம்பந்தனின் பதில் சிரிப்புக்கிடமானதாக இருந்தாலும்கூட மறுபுறம் சம்பந்தன் இந்தியாவை எவ்வாறு அணுகியிருக்கின்றார் என்று நோக்கினால் சம்பந்தனின் செயல் இந்தியாவை ஆத்திரமூட்டக்கூடியது. இது சம்பந்தனின் ஒரு வரலாற்றுத் தவறு. இவ்வாறான தவறைப் புரிந்திருக்கும் கட்சியின் அங்கத்தவரான சுமந்திரன் எவ்வாறு இந்திய மத்திய அரசுடன் மீனவர் பிரச்னை தொடர்பில் பேசப்போகின்றார்?

# கோட்டாபயவின் வாகனம் பியூமிக்கு கிடைத்தது எப்படி?

*கொழும்பு, ஏப். 18*

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னர் பயன்படுத்திய ரேஞ்ச் ரோவர் வாகனத்தை மொடல் அழகி பியூமி ஹன்சமாலி பயன்படுத்தியமை தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரி “மகே ரட்ட” (எனது நாடு) அமைப்பின் தலைவர் சஞ்சய மஹவத்த சட்டவிரோத சொத்துகள் விசாரணை பிரிவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

“தேர்தல் நெருங்கிவிட்டது என்பது தெளிவாகிறது, அரசியல்வாதிகள் தாம் சேமித்த கருப்புப் பணத்தை வரவிருக்கும் தேர்தல் பிரசாரங்களில் புகுத்த முனைகிறார்கள், மேலும் இது பணமோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்களுக்கு நல்ல காலமாக மாறியுள்ளது.

அதன்படி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திய ரேஞ்ச் ரோவர் வாகனத்தை (CBH 1949) பியூமி ஹன்சமாலி எவ்வாறு பெற முடிந்தது என்பதில் எங்களுக்கு சில சந்தேகங்கள் உள்ளன.

“ரேஞ்ச் ரோவர் வாகனம் முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டதா அல்லது கோட்டாபயவால் பியூமிக்கு வழங்கப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது,” என்று மஹவத்த மேலும் கூறினார், மேலும் அந்த மொடல் தற்போது ஒரு அதிசொகுசு குடியிருப்பில் வசிக்கிறார், பிற சொத்துகளை வைத்திருக்கிறார். மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை முறையை நடத்துகிறார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

எனவே, அரசியல்வாதிகளின் கறுப்புப் பணத்துடன் தொடர்புடைய பணமோசடி நடவடிக்கைகளுக்கு பியூமி ஹன்சமாலி பயன்படுத்தப்படுகிறார் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த வாகனத்தின் பெறுமதி 10 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. பியூமி ஹன்சமாலியின் வசம் இந்த வாகனம் எப்படி வந்தது, அதன் பரிமாற்றத்துக்கான காரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த அவரால் எப்படி இவ்வளவு மதிப்புமிக்க சொத்தை வாங்க முடிந்தது என்பது குறித்தும் கேள்விகள் எழுந்துள்ளன.

“எனவே, இந்த முறைப்பாடு மீதான உடனடி விசாரணையை நாங்கள் எதிர்பார்க்கிறோம்,” என்று அவர் மேலும் கூறினார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கப்பட்டன!

*வடமராட்சி, ஏப். 18*

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்று முன்தினமும் பல்வேறு உதவித் திட்டங் கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு - ஒட்டு சுட்டான் - முத்து ஐயன் கட்டு - ஜீவநகர் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பயன் பாட்டுக்காக மலசலகூடம் அமைப்பதற்கு முதல் கட்ட மாக 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

இதேபோன்று, வவு னியா - கணேசபுரம் கிராம சேவகர் பிரிவிலுள்ள அற நெறி பாடசாலை கட்டப் பணிக்காக 2ஆம் கட்டமாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

இந்த உதவிகளை சந்நிதி யான் ஆச்சிரமத்தின் முதல் வர் மோகனதாஸ் சுவாமிகள் அவரின் தொண்டர்களுடன் நேரில் சென்று வழங்கி வைத்தார்.



# மனைவியை வெட்டிவிட்டு கணவன் தலைமறைவு

## அராலியில் நேற்று சம்பவம்

*யாழ்ப்பாணம், ஏப். 18*


மனைவியை கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு கணவர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை மாலை வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் அராலி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், படுகாயமடைந்த மனைவி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

குறித்த தாக்குதலை மேற்கொண்ட கணவன் தலைமறைவான நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



ஏப்ரல் - 18 வியாழக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 05
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : தசமி




**மேடம்**
எதிர்ப்புகள் அடங்கும். பவியாபாரத்தில் அதிரடியான சலுகைகள் மூலம் போட்டிகளை சமாளிப்பீர்கள். சலுகைகள் கிடைக்கும். அதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் சில மாற் றங்கள் செய்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள் வீர்கள். வெற்றி பெறும் நாள்.

**மிதுனம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர் கள். புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். நல்ல செய்தி வரும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். பணிகளை முடிப்பீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கடகம்**
சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
எடுத்த வேலையை முழுமையாக முடிக்க முடியா மல் அவதிக்குள்ளாகினர். பிள்ளைகளிடம் எதிர்ம றையாகப் பேச வேண்டாம். சக ஊழியர்களிடம் அனுசரித்துப்போவது நல்லது.

**கன்னி**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் நவீன உத்திகளைக் கையா ளுவீர்கள். உத்யோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**துலாம்**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறை வேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார் கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதர வால் நினைத்ததை முடிப்பீர்கள். மதிப்புக் கூடும்.

**விருட்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் தொந்தரவு குறையும். அலுவலகத்தில் மரியாதை கூடும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியா தபடி வேலைச்சுமை, வியாபாரத்தில் வேலையாட் களின் ஒத்துழைப்பு குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**மகரம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள் பிள் ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள் வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும்.

**கும்பம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் பழைய வாடிக் கையாளர்களை மாற்றுவீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். திடீர்யோகம் கிட்டும் நாள்.

**மீனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வேற்று மதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். பழைய சிக் கல்கள் தீரும். கனவு நனவாகும் நாள்.

# 8 தொகுதிகளில் பா. ஜ. கட்சி அதிக வாக்குகளை பெறும்!

## 34 தொகுதிகளில் தி. மு. க. வெற்றி அ. தி. மு. க. படுதோல்வி அடையும்

சென்னை, ஏப். 18

தமிழ்நாட்டில் உள்ள 8 தொகுதிகளில் பா. ஜ. க. கூட்டணி அதிகளவு - சுமார், 20 சதவீத வாக்குகளை பெறும். எனினும், தமிழ்நாட்டில் 34 தொகுதிகளை தி. மு. க. கட்சி வெற்றிபெறும். அ. தி. மு. க. கட்சி எந்தத் தொகுதியிலும் வெற்றிபெறாது என்று கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

பாராளுமன்றத் தேர்தலுக் காக தமிழ்நாட்டில் நாளை வாக்குப் பதிவு நடைபெறவுள் ளது. இந்த நிலையில், தமிழ் நாட்டின் பிரபல ஊடகமான தந்தி நடத்திய கருத்துக் கணிப்பு வருமாறு,

தமிழ்நாட்டில் தி. மு. க., அ. தி. மு. க., பா. ஜ. க., நாம் தமி ழர் என 4 முனை போட்டி தீவி ரமாகக் காணப்படுகின்றது.

தி. மு. க. தலைமையிலான கூட்டணி 34 தொகுதிகளை கைப்பற்றும். அ. தி. மு. க. க. கூட்டணி ஒரு தொகுதியையும் கைப்பற்றாது. பா. ஜ. க. ஒரு தொகுதியை வெற்றி கொள் ளும்.

5 தொகுதிகளில் இழுபறி நிலை காணப்படுகின்றது. இவற்றில் தி. மு. க. பா. ஜ. க. இடையேயே கடும் போட்டி நிலவுகிறது. எனினும், இந்தக் கட்சிகளுக்கு நிகராக அ. தி. மு. கவும் உள்ளது என்பது குறிப்பி டத்தக்கது.

ஒட்டுமொத்தமாக தி. மு. க. கூட்டணி 42சதவீத வாக்குக ளையும் அ. தி. மு. க. 34 சதவீத வாக்குகளையும் பா. ஜ. க. 18 சதவீத வாக்குகளையும் நாம் தமிழர் கட்சி 5 சதவீத வாக்குக ளையும் கைப்பற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பா. ஜ. கட்சியை உண்மையில் எதிர்ப்பது நாம் தமிழர் மட்டுமே

## சீமான் தெரிவிப்பு



சென்னை, ஏப். 18

"பா. ஜ.கவையும் மோடியை யும் எதிர்க்கிறோம் என சொல் லும் தி. மு. க. கோவையில் அண்ணாமலையை தோற்க டிக்க எந்த வேலையும் செய்ய வில்லை" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கி ணைப்பாளர் சீமான் தெரிவித் துள்ளார்.

ஈழத்தில் மக்களை கொலை செய்தது காங்கிரஸ் ஆட்சி. அதற்கு துணை நின்றது தி.மு.க. அப்போது பா. ஜ. கவும் அ. தி.மு.கவும் வேடிக்கை பார்த் தன. பா. ஜ. கவின் ஆட்சியில் அனைத்துத் துறையிலும் ஊழல் நிலவுகிறது. இதை எல்லாம் தொடர்ந்து எதிர்த்ததால் அர விந்த் கெஜ்ரிவாலை சிறையில் அடைத்துவிட்டனர். அதே கருத்தை நான் சொல்கிறேன். முடிந்தால் என்னை தொட்டுப் பாருங்கள்.

எத்தனையோ மேதைகள் வந்தனர். தத்துவங்களை கொடுத் தனர். அனைத்தும் படித்து விட்டு உதயசூரியன், கை சின் னம், தாமரைக்கு என வாக்குப் போடுகின்றனர். இதற்கு விஷம் குடித்துவிட்டு செத்துப் போய் விடலாம். மற்ற அரசியல் கட்சி கள் பணத்தை நம்பி தேர்தலில் நிற்கின்றனர். நாங்கள் எங்கள் இனத்தை நம்பியே நிற்கிறோம் - என்றார். (ஐ)

# நாம் தமிழரின் வாக்கு வீதம் அதிகரிப்பு!

சென்னை, ஏப். 18

பாராளுமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி 5 சதவீதத் துக்கு அதிகமான வாக்குகளை பெறும் என்று தமிழ்நாட்டின் பிரபல ஊடகமான தந்தி நடத் திய கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.


நாம் தமிழர் கட்சி, தமிழ் நாடு - புதுச்சேரி தொகுதிகளில் 20 ஆண்கள், 20 பெண்களை வேட்பாளர்களாக நிறுத்தியுள் ளது. அந்தக் கட்சியின் தலை வர் தேர்தலில் போட்டியிட வில்லை.

கடந்த 2019ஆம் ஆண்டு தேர்தலில் 3.9 வாக்குகளை நாம் தமிழர் கட்சி பெற்றது. இந்த நிலையில், இம்முறை 1.1 வீதத் தால் அந்தக் கட்சியின் வாக்கு கள் அதிகரித்துள்ளன

நாம் தமிழர் கட்சி வழக்க மாக போட்டியிட்ட கரும்பு விவசாயி சின்னம் ஒதுக்கப்ப டாத போதிலும் புதிய சின்ன மான மைக் சின்னத்தை மக்களி டம் கொண்டு சென்று சேர்ப்ப தில் அந்தக் கட்சி வெற்றி பெற் றுள்ளது என்றும் கூறப்பட்டது.

# மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் சர்வாதிகார நாடாக மாறிவிடும்!

## கனிமொழி எம். பி.



தூத்துக்குடி, ஏப். 18

பிரதமர் மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்த நாடு சர்வாதிகார நாடாக மாறிவிடும் என்று கனிமொழி எம். பி. தெரி வித்தார்.

பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர்,

"இந்தத் தேர்தலில் யார் பிர தமராக வரவேண்டும் என்ப தைத் தாண்டி யார் இந்த நாட் டுக்கு வேண்டாம் என்று முடி வெடுக்க வேண்டியதுதான் இந்த பாராளுமன்ற தேர்தல். இந்த நாட்டை மதத்தின் பெய ரால், சாதியின் பெயரால் பிரி வுபடுத்தி வருபவர்களுக்கு சரி யான பாடம் புகட்ட வேண் டிய தேர்தல். மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்த நாடு சர்வாதிகார நாடக மாறிவிடும். சிஏஏ சட்டத்தின் மூலமாக மக் களைப் பிரிக்க நினைக்கும் பா. ஜ. க. அரசுக்கு இந்த தேர்தலில் சரியான பாடத்தைப் புகட்ட வேண்டும். இது இன்னொரு சுதந்திரப் போராட்டம் - என் றார். (ஐ)

# பொலிஸார் தாக்கியதில் குடும்பஸ்தருக்கு பாதிப்பு

## வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

வவுனியா, ஏப். 18

**வெளிநாட்டில் இருந்து வருகை தந்துள்ள நபர் ஒருவருடன் சேர்ந்து புளியங்குளம் பொலிஸார் தன்னைத் தாக்கினர் எனத் தெரிவித்து வவுனியா வைத்தியசாலையில் குடும்பஸ்தர் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. வவுனியா சின்னப்பூவரசங்குளத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து பாதிக்கப்பட்ட நபர் தெரிவிக்கையில்-

விசாரணை ஒன்று இருப்பதாக புளியங்குளம் பொலிஸார் நேற்று முன் தினம் என்னை அழைத்தனர். நான் அங்கு சென்ற நிலையில் எனது தொலைபேசி, கைப்பை என்பன பறிக்கப்பட்டு இரு கைகளிலும் விலங்கு போடப்பட்டது.

பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி உட்பட ஏனைய பொலிஸார் என்னை பிடித்து வைத்திருக்க, வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருந்த நபர் ஒருவர் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து என்னை தாக்கினார்.

பின்னர் நாய்போல என்னை இழுத்துச்சென்ற அவர்கள் அந்த நபரின் வாகனத்தில் ஏற்ற முற்பட்டனர். இதன்போது நான் பொதுமக்களின் உதவியை நாடி பிரதான வீதியை மறித்திருந்தேன்.

பின்னர் மீண்டும் என்னை பொலிஸ் நிலையத்துக்குள் இழுத்துச் சென்றனர். அங்கு பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி அவரது சப்பாத்துக் கால்களால் எனது நெஞ்சில் தாக்கினார்.

பின்னர் அங்கு வந்த பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் என்னிடம் வாக்குமூலம் பெற்றுவிட்டு பொலிஸ் நிலையத்தில் இருந்து என்னையும் எனது மனைவி பிள்ளைகளையும் வீட்டுக்கு அனுப்பினார்.

பொலிஸார் தாக்கியதால் எனது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டேன்-என்றார்.

இதேவேளை, குறித்த விடயம் தொடர்பாக தாக்கப்பட்டவரின் மனைவி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதுடன் வைத்தியசாலை பொலிஸாரிடமும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (அ)



# ஜனாதிபதி நுவரெலியாவுக்கு!

கொழும்பு, ஏப். 18

நுவரெலியா - கோர்ட் லொட்ஜ் பெருந்தோட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டார்.

நுவரெலியாவின் மலைகளை சூழவுள்ள சுற்றுலா வாய்ப்புகள் தொடர்பிலும் இதன்போது அவர் அறிந்துகொண்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் கல்வி, சுகாதார பிரச்னைகள் குறித்து ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார். உயர்தரத்தின் பின்னரான அப்பகுதி பிள்ளைகளின் எதிர்காலம் குறித்தும் அவர் ஆராய்ந்தார்.

அதனையடுத்து தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்னைகள் குறித்தும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தினார். (அ)

# தப்பியோடிய கைதிகள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். சிறைச்சாலையில் இருந்து வழக்கு விசாரணைக்காக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதிகளில் இருவர் தப்பியோடிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டுக் குற்றச்சாட்டுக்காக ஒரு வருடச் சிறைத் தண்டனை பெற்று வந்த கைதியும், விளக்கமறியல் கைதி ஒருவருமே நேற்று முன்தினம்காலை தப்பியோடினர்.

உடனடியாக செயற்பட்ட சாவகச்சேரி பொலிஸார், 30 நிமிடங்களுக்குள் இருவரையும் கைது செய்து மீண்டும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

இதன்போது, தப்பியோடிய குற்றத்திற்காக இருவருக்கும் தலா 6 மாத சாதரண சிறைத் தண்டனையும், தலா 1500 ரூபா தண்டப்பணமும் விதித்து நீதவான் உத்தரவிட்டார். (அ)

# இடியப்ப கொத்தின் விலை 1900 ரூபாயா?

## அதிரடியாக கைது செய்த பொலிஸார்

கொழும்பு, ஏப். 18

இலங்கைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணியிடம் கடுமையாக நடந்துகொண்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் தெருவோர உணவு விற்பனையாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணி ஒருவருக்கு இடியப்பக் கொத்து ஒன்றின் விலை 1,900 ரூபாய் என குறித்த நபர் குறிப்பிடும் நிலையில், இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த சுற்றுலாப் பயணி விலை அதிகமாக இருப்பது பற்றி கடை உரிமையாளரிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

அதற்கு அவர் விருப்பம் இருந்தால் வாங்குங்கள். இல்லையென்றால் சென்று விடுங்கள் எனக் கடை உரிமையாளர் கடுமையாக நடந்துகொண்டுள்ளார்.

இதனைக் குறித்த சுற்றுலாப் பயணி தனது கமெராவில் பதிவு செய்த நிலையில் குறித்த காணொலி சமூக வலைத்தளங்களில் வேகமாகப் பரவியதைத் தொடர்ந்து சந்தேகநபரான தெருவோர உணவு விற்பனையாளர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# நாட்டில் குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 18

குழந்தைகள் மத்தியில் கணிசமான அளவு வயிற்றுப்போக்கு நோய் பரவுவதை சுகாதார அதிகாரிகள் அவதானித்துள்ளதையடுத்து பெற்றோர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு வலியுறுத்தியுள்ளனர்.

லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவிக்கையில்-

நீடிக்கப்பட்ட விடுமுறை நாட்களைத் தொடர்ந்து குழந்தைகள் வெளியில் இருந்து அதிக உணவை உட்கொள்வதால் வயிற்றுப்போக்கு ஏற்படுவது ஒரு சாதாரண சூழ்நிலையாகும்.

அறிகுறிகளில் அடிக்கடி தளர்வான அல்லது தண்ணீருடன் மலம் வெளியேறுதல்,



வயிற்று வலி அல்லது பிடிப்புகள், பசியின்மை, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை அடங்கும்.

இந்த அறிகுறிகள் தங்கள் குழந்தைகளில் காணப்பட்டால், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உடனடியாக மருத்துவ சிகிச்சைக்கு அழைத்துச் செல்லுமாறு வலியுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு என்ன உணவளிக்கிறார்கள் என்பதில் அதிக விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்-என்றார். (அ)

## சட்டவிரோதமாகக் காணிக்குள் நுழைந்து

# பெண்ணின் 14 பற்களை உடைத்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைதானார்!

கொழும்பு, ஏப். 18

திவுல்வெவ பிரதேசத்தில் காணி ஒன்றில் சட்டவிரோதமாக உள்நுழைந்து அந்த காணியில் வசிக்கும் பெண்ணைத் தாக்கி 14 பற்களை உடைத்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இவர் கெப்பிற்றிக்கொல்லாவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் திறப்பனை பொலிஸ் பிரிவின் கான்ஸ்டபிள் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான பெண் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதோடு, பல் வைத்தியர்கள் அவரை பரிசோதித்து 14 பற்கள் வாயில் நீண்டு கொண்டிருப்பதாகவும், பற்களை சரி செய்வதற்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்துள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

40 வயதான பெண் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளானார். இவருடைய மகன் செய்த முறைப்பாட்டினையடுத்து சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸ் கான்ஸ்டபிளும் அவரது சகோதரர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# திருட்டுச் சம்பவங்களை தடுக்க விசேட செயற்றிட்டம் மே முதல்!

கொழும்பு, ஏப். 18

நாடளாவிய ரீதியில் வாகனத் திருட்டு, வீடு உடைப்பு, தங்க சங்கிலி பறிப்பு உள்ளிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான விசேட செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மே மாதம் முதலாம் திகதி முதல் இந்த விசேட செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அறிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த விசேட நடவடிக்கைக்காக பொலிஸ் பிரிவுகளில் 60 வீதமான பொலிஸ் உத்தியோகத்தர்களை பொலிஸ் நிலையங்களுக்கு வெளியே நெடுஞ்சாலை கடமைகளில் உடனடியாக ஈடுபடுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மே முதலாம் திகதி முதல் மூன்று மாதங்களுக்குள் இவ் விசேட செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தவும், கடந்த வருடம் பதிவான 32 சதவீத வன்முறைக் குற்றங்களை மிகக் குறைந்த மட்டத்திற்குக் குறைக்கவும் பொலிஸ் மா அதிபர் இலக்கு நிர்ணயித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வறட்சி காலநிலையால் சிறுநீரக நோய் உயர்வு!

கொழும்பு, ஏப். 18

**வறட்சி காலநிலையால் ஏற்படும் நீர்ச்சத்து குறைபாட்டாலும் சிறுநீரக நோய் பரவுகிறது என்று அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் சிறுநீரக நோய் நிபுணர் நடிகா விக்கிரமாராச்சி தெரிவித்துள்ளார்.**

அத்துடன், அநுராதபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் சுமார் 130 புதிய சிறுநீரக நோயாளர்கள் கண்டறியப்படுகின்றனர்.

2019 முதல் 2023ஆம் ஆண்டுக்கு இடையில், அநுராதபுரம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் சிறுநீரக நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இதே காலகட்டத்தில், சுமார் 4 ஆயிரம் சிறுநீரக நோயாளிகள் இந்த நோயால் இறந்தனர் என்றும் அவர் கூறினார்.

மேலும், கடந்த வருடம் ஆயிரத்து 200 புதிய சிறுநீரக நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இவர்களில் அதிகமானோர் ஆண்களாவர். அந்த பகுதிகளில் கிடைக்கும் நீரின் பயன்பாடு, வறட்சியான காலநிலையால் ஏற்படும் நீர்ச்சத்து குறைபாடு மற்றும் மரபியல் பரவல் போன்றவையும் சிறுநீரக நோய்க்கு காரணம் என்று மருத்துவர் கூறினார்.

(அ-ஐ)

# தாயும் மகனும் விபத்தில் படுகாயம்



கொழும்பு, ஏப். 18

தமிழ் சிங்கள புதுவருட கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு வீடு திரும்பிய இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதுண்டதில் தாயும் மகனும் படுகாயமடைந்துள்ளனர்.

விபத்தின்போது மோதுண்ட வாகனமொன்று வீதியின் மத்தியில் தலைகீழாக கவிழ்ந்து கிடந்தது. இவ் வாகனத்தில் பயணித்த தாய் காயமுற்ற நிலையில் வெலிமடை வைத்தியசாலையிலும், மகன் படுகாயமுற்ற நிலையில் பதுளை வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கெப்பிட்டிப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை- நுவரெலியா வீதியில் கெப்பிட்டிப்பொல, பெலும்கல பிரதேசத்தில் இம் விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# மிருகக்காட்சிச்சாலை வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 18

தெஹிவளை தேசிய மிருகக்காட்சிச்சாலை புத்தாண்டின் மூன்று நாட்களில் 13, 14, 15 ஆம் திகதிகளில் 47 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டியுள்ளதாக அதன் உதவிப் பணிப்பாளர் தினுஷிகா மானவடுவ தெரிவித்தார்.

புத்தாண்டு விடுமுறையின் போது பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான மக்கள் மிருகக்காட்சிச்சாலைக்கு வருகை தந்ததாக அவர் கூறினார்.

அதன்படி கடந்த 13ஆம் திகதி 13 இலட்சம் ரூபாவும், 14ஆம் திகதி 16 இலட்சம் ரூபாவும், 15ஆம் திகதி 18 இலட்சம் ரூபாயும் வருமானமாகப் பெறறுள்ளதாக மிருகக்காட்சிச்சாலை மேலும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கொழும்பு-பங்களாதேஷ் இடையே நேரடி விமான சேவைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 18

தனது விமான சேவைகளை விரிவுபடுத்தும் வகையில், பிட்ஸ் எயார் நிறுவனம் நேற்று புதன்கிழமை முதல் கொழும்பு மற்றும் வங்கதேசத்தின் டாக்கா இடையே நேரடி விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

இதுவரை கொழும்பில் இருந்து டுபாய், சென்னை மற்றும் மாலைதீவு ஆகிய மூன்று இடங்களுக்கு மட்டுமே பிட்ஸ் எயார் சேவை இயங்கியது.

அதன்படி, பங்களாதேஷ் இடையே புதிய வழித்தடங்களின் விரிவாக்கத்துடன், அவர்களின் நேரடி விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் இலங்கைக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான சுற்றுலா மற்றும் வர்த்தக துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படும் என பொருளாதார ஆய்வாளர்கள் கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்த ஆண்டு 4 பில்லியன் டொலர் முதலீட்டை கொண்டு வர திட்டம்!

கொழும்பு, ஏப். 18

இந்த ஆண்டு 4 முதல் 4.5 பில்லியன் டொலர் வரையிலான முதலீட்டை நாட்டுக்கு கொண்டு வருவதற்கான அனைத்து திட்டங்களும் தயார் செய்யப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டு 1.5 பில்லியன் டொலர் முதலீட்டுக்கான இலக்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நாடு 1.8 பில்லியன் டொலர் முதலீடுகளைப் பெற முடிந்தது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், முதலீடுகள் கணிசமான அளவில் நாட்டுக்குள் வருகின்றன.

கடந்த போராட்டத்தால் ஏற்பட்ட எதிர்மறை விளைவுகளால், கடந்த ஆண்டு முதல் பகுதியில் எதிர்பார்த்த அளவுக்கு முதலீடுகள் வரவில்லை. ஆனால், பிற்பகுதியில், எதிர்பார்த்த அளவை விட முதலீடுகள் நாட்டுக்குள் வந்துள்ளன- என்றார். (அ)

# லொறியுடன் இ.போ.ச.பஸ் மோதியதில் 8 பேர் காயம்!

கொழும்பு, ஏப். 18

குருநாகல்-பொல்பித்திகம பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த லொறியுடன் இலங்கை போக்குரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் காயமமைந்துள்ளனர்.

குருநாகல், பொல்பித்திகம, ரம்பாகொடெல்ல பகுதியில் வீதியோரத்தில் லொறியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், குருநாகலில் இருந்து - மடகல்ல நோக்கிப் பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் அதன் பின்னால் அதிவேகமாக வந்து மோதியுள்ளது.

இந்த விபத்தில், 8 பேர் காயமடைந்த நிலையில், பொல்பித்திகம ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பொல்பித்திகம பொலிஸார் தெரிவித்தனர்.

19 வயதுக்கும் 66 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பித்திகம பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விசேட பயிற்சி!



கொழும்பு, ஏப். 18

இலங்கையிலுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு விஜயம் செய்திருந்த போது அவர் இதனை கூறினார்.

இதன்படி தப்பிச் செல்லும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களை மோட்டார் சைக்கிள்களில் துரத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்த பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 100 பேருக்கு இந்த விசேட துப்பாக்கிச் சூட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும், எதிர்வரும் மூன்று மாத காலப் பகுதியில் இந்த நாட்டிலிருந்து போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குழு செயற்பாடுகள் இல்லாதொழிக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (அ)

# புதுவருட பாடலை திரிபுபடுத்தி பதிவேற்றிய சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஏப். 18

ரோஹன பெத்தகே என்ற சிங்கள மொழி பாடகர் பாடிய சித்திரை புத்தாண்டுப் பாடலை திரிபுபடுத்தி சமூக ஊடகங்களில் பதிவேற்றிய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு குறித்த விடயம் தொடர்பில் முறைப்பாடுகள் அளிக்கப்பட்டிருந்தன.

அதன்படிப்படையில், முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைய கணினி குற்ற விசாரணைப் பிரிவினரால் அவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைதானவர் தலத்துஓயா பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபர், நேற்று குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுவரும் புத்தாண்டுப் பாடல் திரிபுபடுத்தப்பட்டமை தொடர்பில் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் உத்தரவுக்கமைய கலாசார அலுவல்கள் அமைச்சும் பிரத்தியேக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (அ)

ஈழநாடு



# இலங்கை பொருளாதார மீட்சிக்கு பல தரப்பினரின் ஆதரவும் தேவை

## ஷெஹான் சேமசிங்க கோரிக்கை

கொழும்பு, ஏப். 18

**பொருளாதாரத்தை மீட்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள சீர்திருத்த செயல்பாட்டின் மூலம் இலங்கை மக்கள் நல்ல பலன்களை பெற்று வருவதாகவும் எனினும் இதற்கு இருதரப்பு மற்றும் பல தரப்பு பங்காளிகளின் ஆதரவை இன்னும் எதிர்பார்க்கிறோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஜி-24 நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளதுடன், ஏற்றுமதி செயல்முறையை வலுப்படுத்தி, நேரடி வெளிநாட்டு முதலீட்டின் ஊடாக வெளிநாட்டுக் கடன்களைப் பெறாமல் பொருளாதாரத்தை புதிய வளர்ச்சிப் பாதைக்கு செலுத்தும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை 35 வீதத்திலிருந்து 70 வீதமாக அதிகரிப்பதே இலங்கையின் இலக்காகும் என்றும் அவர் கூறினார்.




மேலும் இலங்கையை பொருளாதார நாடாக மாற்றுவதற்கான நாட்டின் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், கடல்சார் இடம் சார்ந்த திட்டத்தை உருவாக்கும் பணியை இலங்கை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும், அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டை அடுத்த வாரம்

கொழும்பு, ஏப். 18

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான, பரீட்சை அனுமதி அட்டை விநியோகம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபர்கள் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ள முடியும் எனவும், தனியார் விண்ணப்பதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் எனவும் பரீட்சைத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெறும் எனவும், 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சாத்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் எனவும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# யானை தாக்கியதில் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 18

கல்கமுவ மற்றும் மஹ களுகொல்லேவ ஆகிய பகுதிகளில் யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

தனது மகளுடன் கல்கமுவ கல்லேவ பகுதியிலுள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர், நேற்று முன் தினம் பிற்பகல் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

62 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்போது காயமடைந்த அவரது மகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே, மஹ களுகொல்லேவ பகுதியில் வயல் காணியில் யானை தாக்குதலுக்கு இலக்காகி 35 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யானைகளிடமிருந்து பயிர்ச் செய்கையைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(அ)

# பாலித தெவரப்பெருமவின் இறுதிச்சடங்கு வெள்ளியன்று

கொழும்பு, ஏப். 18

உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெருமவின் இறுதிச்சடங்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெற்று உடல் குடும்ப மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாலித தெவரப்பெரும தமது வீட்டில் வைத்து மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில், களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் நேற்று முன் தினம் மாலை உயிரிழந்தார்.

(அ)

# புதிய நியமனங்களுக்கு எதிராக சுதந்திர கட்சியினர் ஆட்சேபனை

கொழும்பு, ஏப். 18

சுதந்திரக் கட்சியில் கடந்த சில தினங்களில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் தொடர்பில், கட்சியின் பதில் பொதுச் செயலாளரால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஆட்சேபனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்சி யாப்பிற்கமையவே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு சுட்டிக்காட்டியுள்ளதாக கட்சியின் பதில் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்கவிடம் வினவியபோது, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர், சட்டத்தரணியூடாக தமது ஆட்சேபனையை முன்வைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

இன்று இடம்பெறவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தின்போது,சுதந்திரக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பிலும் அதற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள ஆட்சேபனை தொடர்பிலும் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் கூறினார்.

(அ)

# போதைப்பொருளுடன் கைதான 10 பேரையும் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க அனுமதி!

கொழும்பு, ஏப். 18

இலங்கைக்கு தெற்கே ஆழ்கடலில் 380 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களுடன் கைதான 10 பேரையும் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 12 ஆம் திகதி இலங்கை கடற்படை மற்றும் கடலோர காவல்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 83 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 179 கிலோகிராம் ஐஸ் ரக போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்த நிலையில், போதைப் பொருட்களுடன் கைதான சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 7 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை மீனவர்கள் 15 பேருக்கு மியன்மாரில் பொதுமன்னிப்பு!

கொழும்பு, ஏப். 18

மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இலங்கை மீனவர்களுக்கு அந்த நாட்டு அரசாங்கம் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது என அறிவித்துள்ளது

இதனை மியன்மாரில் உள்ள இலங்கைத் தூதுவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, கடந்த டிசெம்பரில், இந்த குழு மியன்மார் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு பின்னர் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நடிகை தமிதா தொடர்ந்து மறியலில்

கொழும்பு, ஏப். 18

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள, நடிகை தமிதா அபேரத்ன மற்றும் அவரது கணவர் ஆகியோரை, இம் மாதம் 24ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பண மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் முன்வைத்த விடயங்களைக் கருத்திற்கொண்டே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

# புத்தாண்டு காலத்தை இலக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் 700 சுற்றிவளைப்புக்கள்

கொழும்பு, ஏப். 18

புத்தாண்டு காலத்தை இலக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் 700 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனைகளின் போது சட்டத்தின் கீழ் சிக்கிய நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அதிகார சபையின் சோதனைகள் மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சஞ்சய் இராஜசிங்க தெரிவித்தார்.

பொருட்கள் வாங்கும் போது நுகர்வோர் கவனிக்க வேண்டிய சில விடயங்கள் குறித்தும் சோதனை நடவடிக்கையின் போது அவர் தெளிவுபடுத்தினார்.

# போலி மருத்துவ நிலையம் சுற்றிவளைப்பில் சிக்கியது

## போலி வைத்தியரும் அகப்பட்டார்

அம்பாறை, ஏப். 18

**பொதுமக்களின் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் இடங்கள் மீதான தொடர் சுற்றிவளைப்பின் மற்றுமொரு அங்கமாக சட்டவிரோத மருத்துவ நிலையம் ஒன்று நேற்று முன் தினம் சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்டு அந்த நிலையத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது.**

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களுக்கு தொடர்ந்தும் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை அடுத்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஷகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை வழிகாட்டலில் இந்த திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றது.




இந்த சுற்றிவளைப்பின்போது தன்னை வைத்தியராக அடையாளம் காட்டிக்கொண்டு எவ்வித அரச அங்கீகாரமுமின்றி இயங்கிவந்த மருத்துவ நிலையமும், அழகுக்கலை நிலையமும், பயற்சி நிலையமும் நடத்தி வந்த நபர் இணங்காணப்பட்டார். அவரிடமிருந்த மனித பாவனைக்கு பொருத்தமற்ற மற்றும் ஆபத்தான மருந்துகளும் கைப்பற்றப்பட்டன. மட்டுமின்றி முறையான கல்வித் தகைமையோ, தொழில் தகைமையோ இல்லாத குறித்த நபர் மருத்துவப் பரிந்துரைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அனுமதியில்லாத மருந்துகளைப் பாவித்து வந்தமையும் இதன்போது கண்டறியப்பட்டது. அவர் மருத்துவராக தன்னை அடையாளப்படுத்திய சான்றுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கல்முனை மாநகர பிரதேசத்தில் மூன்று கிளைகளைக் கொண்டு இயங்கிய இந்த நிலையம் மனித உயிர்களுக்கும், சுகாதார நிலைக்கும் சவால் விடும் வகையில் இயங்கி வந்தமையை கண்டறிந்து இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை சுதாரத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# கல்முனை-அக்கரைப்பற்று நெடுஞ்சாலையில் விபத்து!

*அம்பாறை, ஏப். 18*

*கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதியில் அக்கரைப்பற்றை நோக்கி பயணித்த சிறிய ரக காரொன்று வேக கட்டுப்பாட்டை மீறி நேற்று முன் தினம் மாலை விபத்துக்குள்ளானது.*

*இதனால் மாநகர சபையினால் அண்மையில் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள் பல சேதத்திற்குள்ளாகின.*

*வாகனம் சேதமடைந்துள்ளதுடன் வாகனத்தில் பயணித்த எவருக்கும் உயிர்ச்சேதமோ காயமோ ஏற்படவில்லை.*

*விபத்து சம்பந்தமாக கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

*(அ)*

# கல்முனை சமுர்த்தி வங்கியில் புதுவருட கொடுக்கல் வாங்கல்



*அம்பாறை, ஏப். 18*

*கல்முனை சமுர்த்தி வங்கியில் வங்கி முகாமையாளர் யூ.கே.சிறாஜ் தலைமையில் புதுவருட கொடுக்கல் வாங்கலும் கைவிசேடமும் இடம் பெற்றது*

*இதில் வங்கி வாடிக் கையாளர்கள் கணக்கு திறத்தல், கைவிசேடத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் ,கள அளவீடுகள் போன்றனவும் இடம்பெற்றன.*

*இதன்போது வங்கி உதவி முகாமையாளர் ,வலய உதவி முகாமையாளர், கள உத்தியோகத்தர்கள், வங்கி பணிக் குழுவினர், வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)*



# காரைதீவு பிரதேசத்தில் இயங்கும் உணவகங்களில் திடீர் சோதனை!

*காரைதீவு, ஏப். 18*

*உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா வஸீரின் ஆலோசணைக்கிணங்க காரைதீவு பிரதேச பல்வேறுபட்ட உணவுகள் கையாளும் நிறுவனங்கள், மீன் விற்பனை நிலையங்கள், இறைச்சி விற்பனை நிலையங்கள், உணவு கண்காட்சிகள், மற்றும் சமய ஸ்தலங்களில் சித்திரை பண்டிகைக் காலத்தை முன்னிட்டு திடீர் பரிசோதனை இடம் பெற்று.*

*உணவங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கின்மை, நீண்ட நாட்களுக்கு பொருத்தமில்லாதவாறு உணவுகளை குளிர்சாதனப் பெட்டிகளில் தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருட்களின் தரம் போன்றன காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரிகளினால் இந்த களப் பரிசோதனையில் பரிசோதிக்கப்பட்டது.*

*மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதர்களினால் இதன்போது உணவு மற்றும் நீரினால் பரவக்கூடிய நோய்கள் தொடர்பான விழிப்புணர்வும் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டது.*

*(அ)*

# சாய்ந்தமருது மாலை நேர கடைகளில் திடீர் சோதனை

*அம்பாறை, ஏப். 18*

*சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள் மீது கடந்த சில தினங்களாக திடீர் சோதனை நடவடிக்கையை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி எம். ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பரின் தலைமையிலான சுகாதார குழுவினர் முன்னெடுத்து வருகின்றனர்.*

*சுகாதாரமற்ற உணவுகள் பொதுமக்களுக்கு விற்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொதுமக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது பிரதேச இரவு நேர உணவகங்கள், டேஸ்ட் கடைகள், கோழி பதப்படுத்தி விற்கும் இடங்கள் போன்றவற்றில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.*




*சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம். ஜெரின் உட்பட காரியாலய உத்தியோகத்தர்கள் சகிதம் சாய்ந்தமருது பிரதேச உணவு தயாரிக்கும், விற்பனை செய்யும் நிலையங்கள் மீது திடீர் பரிசோதனையும், முற்றுகையும் இடம்பெற்று மாலை நேர உணவகங்களில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகள், கழிவு எண்ணெய்கள் மற்றும் புற்றுநோயை உண்டாக்கும் தன்மை கொண்ட சுவையூட்டிகள், கலப்படம் செய்யப்பட்ட சுவையூட்டிகள் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டன.*

*(அ)*

# கிழக்கு கடலில் 9 பேர் கைது

*திருமலை, ஏப். 18*

*கிழக்கு கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்ட 09 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*திருகோணமலை ஆனையிறவு கடற்பகுதியில் ஏப்ரல் 15 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி ஒன்பது பேர் இரண்டு படகுகள் மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.*

*கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அவர்கள் கிண்ணியா பிரதேசத்தில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.*

*கைது செய்யப்பட்ட ஒன்பது சந்தேக நபர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மீன்பிடி பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.*

*(அ)*

சிறைச்சாலையில் இருந்து

# வீட்டுக் காவலுக்கு மாற்றப்பட்டார் சூகி!



நைபிட்டோ, ஏப். 18

**26 ஆண்டுகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட, மியன்மாரின் முன்னாள் ஜனாதிபதி ஆங் சான் சூகி, சிறையிலிருந்து வீட்டுக் காவலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக மியான்மார் இராணுவம் தெரிவித்துள்ளது.**

78 வயதான ஆங் சான் சூகி, கடந்த 2020 ஆம் ஆண்டு தேசிய ஜனநாயகக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு அந் நாட்டு ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் தேர்தலில் மோசடி செய்ததாக கூறி அடுத்த ஆண்டே இவரது பதவி பறிபோன நிலையில், மியன்மாரில் மீண்டும் இராணுவ ஆட்சி கொண்டு வரப்பட்டது.

மேலும் 2 ஆண்டுகளுக்கு அங்கு அவசர நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையே ஆங் சான் சூகி உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

இதனையடுத்து, ஆங் சான் சூகி மீது இராணுவத்துக்கு எதிரான கிளர்ச்சி, ஊழல் முறைகேடு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இது தொடர்பாக பல வழக்குகள் அந் நாட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இவற்றுள் சில வழக்குகளில் அவருக்கு இதுவரை 26 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், ஆங் சான் சூகி சிறையில் இருந்து வீட்டுக் காவலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக மியன்மார் இராணுவம் அறிவித்துள்ளது.

வெப்ப அலை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறையிலிருந்து மாற்றப்பட்ட ஆங் சான் சூகி எங்கு இருக்கிறார் என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

தென்கிழக்கு ஆசிய நாடான மியான்மரில் இராணுவ ஆட்சியை எதிர்த்து பல போராட்டங்களை நடத்திய ஆங் சான் சூகி, அமைதிக்கான நோபல் பரிசையும் பெற்றுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)



# வெள்ளக் காடாகியுள்ள டுபாய் விமான நிலையம்

டுபாய், ஏப். 18

ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் வெள்ள பாதிப்பு தொடர்ச்சியாக பாடசாலைகள் முழுவதும் மூடப்பட்டன. அரசு ஊழியர்கள் வீட்டில் இருந்து பணிபுரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

டுபாயில் பாலைவனம் நிறைந்த பகுதிகள் அதிகளவில் உள்ளன. வெப்பநிலையும் அதிகரித்து காணப்படும் சூழலில், ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் நேற்று பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால், சாலைகளில் நீர் தேங்கியது. பல இடங்களில் வாகன போக்குவரத்தும் முடங்கியது. கனமழை மற்றும் வெள்ளம் எதிரொலியாக, விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

டுபாயில் சர்வதேச பயணிகள் அதிகம் வரக்கூடிய, உலகில் பரபரப்புடன் இயங்க கூடிய டுப்பாய் சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளநீர் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து, விமான நிலையத்திற்கு வந்த பல விமானங்கள் வேறு பகுதிகளுக்கு திருப்பி விடப்பட்டன.

(அ)



# ஈரானின் அணு உலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம்

## ஐ.நா. அமைப்பு கவலை

ஜெனிவா, ஏப். 18

ஈரானின் அணுஉலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தலாம் என ஐ.நாவின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

சிரிய தலைநகரில் உள்ள ஈரானின் துணைத் தூதரகத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலுக்கு ஈரான் பதில் தாக்குதலை மேற்கொண்டுள்ள நிலையில் தனது நாடு அதற்கு பதிலடி கொடுக்கும் என இஸ்ரேலின் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈரான் தனது அணுஉலைகளை மூடியது என தெரிவித்துள்ள ஐ.ஏ.ஈ.ஏ அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ரபெல் குரொசி தெரிவித்துள்ளார். பின்னர் கடந்த திங்கட்கிழமை அவை திறக்கப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேல் அணுஉலைகள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் சாத்தியம் குறித்த கேள்விக்கு பதிலளித்துள்ள அவர், நாங்கள் எப்போதும் அது குறித்து அச்சமடைந்துள்ளோம் கடும் பொறுமையை நிதானத்தை கடைப்பிடிக்க கோருகின்றோம் என தெரிவித்துள்ளார். (அ)

# இஸ்ரேலியப் படையினர் ஆக்கிரமித்திருந்த அல்ஸிபா மருத்துவமனைக்குள் புதைகுழிகள்

## தனது தாயாரின் உடலை அடையாளம் கண்டார் மகன்

ஜெருசலேம், ஏப். 18

இஸ்ரேலிய படையினர் ஆக்கிரமித்திருந்த காசாவின் அல்ஸிபா மருத்துவமனையில் பாரிய மனித புதைகுழியொன்றை மருத்துவ பணியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

காணாமல்போன தங்களின் குடும்பத்தவர்களின் உடல்கள் அங்கு காணப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதாக பொது மக்கள் அங்கு திரண்டனர் என அல்ஜசீரா தெரிவித்துள்ளது.

முஸ்லீம்களின் புனித பண்டிகைக் காலம் முதல் நான் இந்த மனித புதைகுழியிலிருந்து உடல்கள் தோண்டப்படுவதை பார்வையிட்டு வந்துள்ளேன். அவ்வேளை எனது தாயாரின் உடலை அடையாளம் கண்டேன் என ஒருவர் தெரிவித்துள் ளார்.

காலில் காணப்பட்ட வித்தியாசமான அடையாளத்தை வைத்தே அது எனது தாய் என்பதை உறுதி செய்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

அல்ஸிபா மருத்துவமனையில் அடையாளம் காணப்பட்டுள்ள பல மனித புதைகுழிகளில் இதுவும் ஒன்று என தெரிவித்துள்ள அல்ஜசீரா, இரண்டு வாரங்கள் மருத்துவமனையை



தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த பின்னர் ஏப்ரல் முதலாம் திகதி இஸ்ரேலிய படையினர் இந்த மனித புதைகுழிகள் மீட்கப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது.

முற்றாக சேதமடைந்துள்ள காசாவின் மருத்துவமனை செயல்பட முடியாத நிலையில் காணப்படுகின்றது.

எனினும் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட சில உடல்கள் மருத்துமவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகளின் உடல்கள் என நேரில் பார்த்த சிலர் தெரிவித்துள்ளனர்.

ஒரு உடல் நோயாளியின் காயங்களை சுற்றிக் கட்டப்படும் துணியுடன்காணப்பட்டுள்ளது.

கொலைகளை பார்த்துள்ளதால் எங்களுக்கு உடல்களை எங்கு தேடவேண்டும் என்பது தெரிந்திருக்கின்றது என மருத்துவப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பத்து நாட்களுக்கு மேல் நாங்கள் இங்கு வசிக்கின்றோம் என தெரிவித்துள்ள அம்புலன்ஸ் சாரதியொருவர், இன்றே பல உடல்களை மீட்டுள்ளோம். 15 உடல்களை மீட்டுள்ளோம். அவை நோயாளிகள் உடையவை என குறிப்பிட்டார்.

(அ)

# சாள்ஸின் உருவப்படத்துடன் பிரித்தானிய பணத்தாள்கள்!

லண்டன், ஏப். 18

பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ல்ஸின் படத்துடன் புதிதாக அச்சிடப்பட்ட பிரித்தானிய பணமான பவுண்டு தாள்கள் எதிர்வரும் ஜ/ன் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என பிரித்தானிய வங்கி அறிவித்தது.

பிரித்தானிய ராணி எலிசபெத் மறைந்த பின்னர் பிரித்தானியாவின் மன்னராக மூன்றாம் சார்ல்ஸ் பொறுப்பேற்றார்.

இதனையடுத்து, மன்னர் மூன்றாம் சார்லஸின் படத்துடன் பிரித்தானிய பணமான பவுண்டு வெளியாகும் என பிரித்தானிய வங்கி அறிவித்தது.

அதன்படி, பிரித்தானிய நாட்டு பணத்தின் தாள்களான 5,10,20 மற்றும் 50 பவுண்டுகளில் மன்னரின் படம் அச்சிடப்பட்டுள்ளது.

மன்னர் மூன்றாம் சார்லஸ் படத்துடன் அச்சிடப்பட்ட குறித்த பவுண்டு தாள்களை, பெக்கிங்காம் அரண்மனைக்குச் கொண்டுச் சென்ற இங்கிலாந்து வங்கியின் ஆளுநர் ஆண்ட்ரூ பெய்லி மன்னர் சார்ல்சிடம் காட்டி ஒப்புதல் பெற்றுள்ளார்.

இந்த புதிய பவுண்டு தாள்கள், எதிர்வரும் ஜூன் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தற்போது நடைமுறையில் உள்ள, மறைந்த ராணி எலிசபெத் படத்துடன் பண தாள்களுக்கு எவ்வித பாதிப்பும் இருக்காது என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு



# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 13 வருடங்களில் 9,375 வாகன விபத்து!

கொழும்பு, ஏப்.18

**தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்டு இது வரையிலான 13 வருடங்களில் 9375 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த விபத்துக்களில் 66 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

நெடுஞ்சாலை பாதுகாப்பு செயல்திட்டத்தை அமைக்கும் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின்போதே இவ்விடயம் தெரிய வந்துள்ளது.

இவற்றில் 5282 விபத்துக்கள் வாகனச் சாரதிகளின் தவறால் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

3056 விபத்துக்கள் வாகனங்களில் விலங்குகள் மோதுவதால் மற்றும் அதிக மழை காரணமாக இடம்பெற்றுள்ளது.

அதன்படி, விலங்குகளுடன் மோதுவதால் மத்தள பிரதேசத்தில் அதிகளவிலான விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

இவை தவிர, வாகனங்களில் ஏற்பட்டுள்ள கோளாறுகள் உள்ளிட்ட ஏனைய காரணங்களால் 837 வாகன விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. (அ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கல்கிஸையில் ஒருவர் கொலை!

கொழும்பு, ஏப். 18

கல்கிஸை பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பொருபன பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக கல்கிஸை பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இரத்மலானை, பொருபன பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருக்கும் போது, வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இனந்தெரியாத இரண்டு நபர்கள் இவரை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கல்கிஸை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# முட்டை விலை உயர்வால் கேக் உற்பத்தி இல்லை!

கொழும்பு, ஏப். 18

முட்டை விலை அதிகரிப்பால் பண்டிகைக் காலங்களில் கேக் உற்பத்தியை மேற்கொள்ளவில்லை என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, அந்த சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன இந்த விடயத்தை கூறினார்.

அத்துடன், சுமார் 25 சதவீதமான கேக் உற்பத்தி மாத்திரமே மேற்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது சந்தையில் முட்டை ஒன்று 55 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை, சந்தையில் மரக்கறிகளின் விலை மேலும் குறைந்துள்ளது.

மலைநாட்டு பகுதிகளில் பயிரிடப்படும் மரக்கறிகளே இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# 485 பேரின் ஓய்வூதியம் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 18

இலங்கையில் இருந்து வெளிநாடு சென்றுள்ள 485 பேரின் ஓய்வூதியம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான செல்லுபடியாகும் உயிர்வாழ்ச் சான்றிதழை வழங்காத காரணத்தால், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியம் பெறுவோர் தொடர்ந்து ஓய்வூதியம் பெறுவதற்கு ஆண்டுக்கு ஒருமுறை உயிர்வாழ் சான்றிதழை ஓய்வூதியத் திணைக்களத்திடம் வழங்குவது கட்டாயமாகும்.

இல்லையெனில் ஓய்வூதியத் தொகையை நிறுத்த ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

இதேவேளை, 2023ஆம் ஆண்டு 1061 பேரின் ஓய்வூதியம் செல்லுபடியாகும் சான்றிதழ் வழங்காத காரணத்தினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், அதில் 576 பேர் சான்றிதழைப் புதுப்பித்துள்ளனர்.

மேலும், 2022ஆம் ஆண்டு செல்லுபடியாகும் உயிர்வாழ்ச் சான்றிதழ் வழங்காததால், 2833 பேரின் ஓய்வூதியம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, இதுவரை 1250 பேர் மட்டுமே தங்கள் சான்றிதழை புதுப்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும், செல்லுபடியாகும் சான்றிதழ்கள் வழங்கப்படாமையால் அவர்களின் ஓய்வூதியம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதனை மீண்டும் செயல்படுத்துவதற்கு ஓய்வூதியம் பெறுவோர் உரிய சான்றிதழ்களை தூதரகத்துக்கு தனிப்பட்ட முறையில் வழங்கவேண்டும் எனவும் திணைக்களம் கூறுகிறது. (அ)

# சர்வதேச நாணய நிதியத்துடன் புதிதாக ஒப்பந்தம் செய்யப்படும்

## சஜித் பிரேமதாஸ உறுதி

கொழும்பு, ஏப். 18

சர்வதேச நாணய நிதியத்துடன் புதிதாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோது அவர் இதனைக் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டார்.




மக்களுக்கு நலன் வழங்கக்கூடிய, மனிதாபிமான நிபந்தனைகள் அடங்கிய புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என அவர் தெரிவித்தார்.

இதன் ஊடாக நாடு தற்பொழுது எதிர்நோக்கியுள்ள வங்குரோத்து நிலை மீட்கப்பட்டு அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும் என சஜித் பிரேமதாச நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# பாதாளக் குழுக்களை சேர்ந்த 7 பேர் கைது!

கொழும்பு, ஏப். 18

பாதாள உலகச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட விசேட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் 4 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மட்டக்குளிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு 15 பிரதேசத்தைச் சேர்ந்த 19 மற்றும் 26 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் அதுருகிரிய, மாலபே ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அதுருகிரிய, கொழும்பு 15 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 27 மற்றும் 46 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலி பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் பொல்வத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் ஹிக்கடுவை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் வட பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கம்பஹா, ராகமை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கணேமுல்ல, ராகமை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 36 மற்றும் 38 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 423 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# நகர அபிவிருத்தி அதிகார சபையால் அகற்றப்பட்ட விற்பனை நிலையங்கள்

கொழும்பு, ஏப். 18

கொழும்பு-புறக்கோட்டை, பஸ்ரியன் மாவத்தையில் உள்ள அங்கீகரிக்கப்படாத விற்பனை நிலையங்கள் நேற்று அதிகாலை நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் அகற்றப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டு, லொத்தர் சீட்டு விற்பனைக்காக இந்த விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டன.

எவ்வாறாயினும், விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் குறைந்ததால், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் ரோசி சேனாநாயக்க, லொத்தர் சீட்டுக்கு மேலதிகமாக ஏனைய பொருட்களையும் விற்பனை செய்ய அனுமதித்ததாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்த விற்பனை நிலையங்களை அகற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் பத்ராணி ஜயவர்தனவிடம் கேட்டபோது-

மிதக்கும் சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ள இந்த விற்பனை நிலையங்களால் பயணிகள் நடைபாதையில் செல்வதற்கு சிரமப்படுவதைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொலிஸார் இணைந்து இந்த விற்பனை நிலையங்களை அகற்றினர்.

எனினும் அனுமதிப் பத்திரத்தைக் கொண்டுள்ள இந்த வர்த்தக நிலையங்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி அகற்றப்பட்டமையானது நியாயமற்ற செயல் என அங்கு விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். (அ)

# ஜேர்மனி அதிருப்தி

கொழும்பு, ஏப். 18

நாட்டில் ஊழல் மோசடிகளுக்கு எதிரான சட்ட நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஜேர்மனி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஜேர்மன் வர்த்தக மற்றும் கைத்தொழில் விவகாரங்களுக்கான பிரதிநிதிகள் குழுவின் பிரதானி மாரியா அன்டொனியா வொன் சோன்பொர்க் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கு எதிரான சட்டங்கள் காணப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சவால்கள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## ஈஸ்டர்...

வார இதழின் ஆசிரியருமான அருட் தந்தை பெர்னாண்டோ, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சில விவரங்கள் தனக்குத் தெரியும் என சி. ஐ. டியினர் நம்புவதால் இந்த அழைப் பாணையை தமக்கு அனுப்பியுள்ளனர் என்று தெரிவித்தார்.

அருட்தந்தை பெர்னாண்டோ கடந்த 2021 நவம்பர் 3 முதல் 8 வரையான காலப்பகுதியிலும் சி. ஐ. டியால் அழைக் கப்பட்டிருந்தார். அப்போது, அவர் கைது செய்யப்படுவதற்கு எதிராக தடை உத்தரவு பெறப்பட்டிருந்தமையும் நினை வில் கொள்ளத்தக்கது. (ஐ)

## மடு...

மணிமுதல் பிற்பகல் 4.00 மணி வரை சிறப்பு வழிபாடு நடைபெறவுள்ளது.

மருத மடு மாதாவின் வருகையால் நெல்லியடி நகரமே விழாக் கோலம் பூண்டு காணப்படுகிறது.

மடு மாதாவை தரிசிக்க வடமராட்சி யின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகை தந்துள்ளனர். நெல்லியடி பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடி படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-02)

## குறுத்தகவல்...

போலி இணையத்தளம், போலி கைபேசி இலக்கங்கள் மூலம் இந்த மோசடி இடம்பெறுவதாக தபால் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தபால் திணைக்களத்தை பயன் படுத்தி முன்னெடுக்கப்படும் இவ்வா றான மோசடிகளில் சிக்க வேண்டாம் என திணைக்களம் மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

தபால் திணைக்களமானது, கடன் அட்டைகள் தொடர்பில் குறுஞ்செய் திகள் மூலமாகவோ அல்லது வேறு எந்த வகையிலும் தகவல்களை பெற்றுக் கொள்வதில்லை என தபால்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சுதந்திர கட்சியின்...

பகுதிகளிலும் வியாபித்திருந்தது.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்தக் கட்சியை பாதுகாக்க வேண்டும். அதனை செய்யாவிட்டால் இந்த நாடு பேரழிவை சந்திக்கும். நாட்டு மக்கள் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் ஆட்சியையே விரும்புகின்றனர். கட்சியின் தலைவர்கள் பிரிவினைகளை தவிர்த்து செயல்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது - என்றார். (ஐ)

## பண்டிதர்...

முன்தினம் இரவு தனது இல்லத்திலேயே நோய் மற்றும் வயது மூப்பால் காலமானார்.

ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தின் தலைவ ராக 40 ஆண்டுகளாக பதவி வகித்த இவர் பத்திரிகையாளர், பதிப் பாசிரியர், இலக்கண - இலக்கியங் களுக்கு உரைகளை எழுதியதுடன் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். அத்துடன், யாழ்ப்பாணம் சென். பற் றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரின் மறைவு குறித்து யாழ். பல்க லைக்கழக முன்னாள் துணைவேந்த என். சண்முகலிங்கன், "ஈழத்து மரபுவழி பண் டித கல்வியின் பேராசானை தமிழுலகம் இழந்து நிற்கின்றது. கடந்த அரைநூற் றாண்டுகாலமாக மரபுவழித் தமிழ் கல்வி நிறுவனமான ஆரிய திராவிட பாஷா விருத்தி சங்கத்தை பல்வேறு இன்னல் களின் மத்தியில் காத்து நின்ற செயல் வீரனின் மறைவு ஈடுசெய்ய முடியாதது.", என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பத்திர...

இலங்கை அதிகாரிகள் நல்லெண்ணத் துடன் இணைவார்கள். இலங்கை அதி காரிகள் அனைவரையும் நியாயமாகக் கையாள்வதற்கும் அத்தகைய பேச்சுக ளில் எதிர்பார்க்கப்படும் அதிகபட்ச வெளிப்படைத்தன்மையை உருவாக்குவ தற்கும் பணியாற்றுவார்கள் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார்.

(தொடர்புடைய செய்தி பக்கம் - 7இல்)

## கடன்...

அவர்கள் இலங்கை மக்களுக்காகவே அதனை செய்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். முன்னெ டுக்கப்படும் இந்த பேச்சுகளுக்கமைய 2040ஆம் ஆண்டு வரை நாம் செயல்பட வேண்டும்.

சுமார் 10 வருடங்களுக்கான இணக் கப்பாட்டை எட்டுவதே இதன் பொரு ளாகும். ஆனால், தற்போதைய அரசாங் கம் ஆகக் கூடியது இன்னும் 6 மாதங்கள் மாத்திரமே ஆட்சியிலிருக்கும். எனவே, இதில் அரசாங்கத்துக்கு அப்பால் எதிர்க் கட்சியின் நிலைப்பாட்டையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும்.

உதாரணத்துக்கு மே மாதம் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க இந்த இணக் கப்பாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட் டதன் பின்னர், சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியானால் அவரும் அந்த ஒப் பந்தத்துக்கு அமையவே செயல்பட வேண்டும். அவ்வாறில்லை என்றால் நாம் மீண்டும் வங்குரோத்து அடைந்த நாடாகி விடுவோம். எவ்வாறிருப்பினும் மீண்டுமொருமுறை கடன் மறுசீர மைப்பை மேற்கொள்வதற்கான வாய்ப் பும் இலங்கைக்கு இல்லை.

ஆனால், சில அரசியல் கட்சிகள் இது தொடர்பான புரிதல் இன்றி தவறான கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின் றன. மக்களை ஏமாற்றுவதற்கும் எல்லை உள்ளது. கடன் மறுசீரமைப்பை மேற் கொள்ள வேண்டியது அத்தியாவசிய மானதாகும். எனவே, எந்தளவு விரை வாக கடன் மறுசீரமைப்பு மேற்கொள் ளப்படுகின்றதோ அந்தளவுக்கு சாதக மான விளைவுகள் முழு நாட்டு மக்களுக் கும் ஏற்படும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை அடிப்படையாகக் கொண்டே கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள முடியும் என்று கடன் வழங்குநர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், தற்போது நாம் எதிர்பார்ப் பதைவிட பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகமாகக் காணப்பட்டால், அந்த நேர்மறையான வளர்ச்சியின் அதிக பங்கு தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். உற்பத்தி பொருளாதார டொலர் அடிப்படையி லேயே மதிப்பிடப்படும். இது தொழில் நுட்ப காரணமாகும்.

எமது பொருளாதார வளர்ச்சி வேகத் துக்கு அமைய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவே தெரிகிறது. ஆனால், அது முழுமையாக அவ்வாறு இடம்பெறத் தேவையில்லை என்றே நாம் எண்ணுகின்றோம். கடன் மறுசீர மைப்பில் பொருளாதார வளர்ச்சி வேகம் ஓரளவு தாக்கம் செலுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால், நூறு வீதம் தாக்கம் செலுத்தினால் அது எமக்கு எதிர் மறையான தாக்கத்தை அதிகரிக்கும்.

இன்னும் 6 மாதங்களே தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் என்பதால், எட்டப்படும் இணக்கப் பாடுகளில் வெளிப்படைத் தன்மையைப் பேணுமாறு வலியுறுத்துகின்றோம். சர்வதேசக் கடன்களில் ராஜபக்ஷர்கள் பெருமளவு மோசடி செய்துள்ளனர். 8 இலட்சம்கடன் காணப்படுகிறது. ஆனால், சொத்து மதிப்பு 2 இலட்சம் கோடியாகும். ஆனால், ராஜபக்ஷர்க ளால் கொள்ளையிடப்பட்ட ஒவ்வொரு டொலரும் எமது ஆட்சியில் கணக் காய்வுக்கு உட்படுத்தப்படும். எனவே, பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றுவ தற்கு நாம் தயாராக இல்லை. யதார்த் தத்தை நாம் தொடர்ந்தும் மக்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருப்போம்- என்றார். (ஐ)

# கம்பனிகளை துரத்தியடிப்பதற்கான போராட்டத்தில் சகலரும் இணைக

## வடிவேல் சுரேஷ் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 18

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் கம்பனிகள் எவ்வாறு தான்தோன்றித்தனமாகவும் தன்னிச்சை யாகவும் செயல்படுகின்றன என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் புரிந்துகொள்ள வேண்டும். 24ஆம் திகதி மீண்டும் சம்பள நிர்ணய சபை கூடும்போது தீர்க்கமான முடிவு எடுக்கப்படாவிட்டால் கம்பனிகளை துரத்தியடிப்பதற்கான போராட்டத்தில் தொழில்சங்கங்கள் எவ்வித பேதமும் இன்றி ஒன்றிணைய வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழி லா ளர் சங்கத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்னை ஏற்கனவே, ஒரு வருடம் காலதாமதமடைந்துள்ளது. இந்த சம்பள விவகாரம் தொடர்ந்தும் திட்டமிட்டு இழுத்தடிப்பு செய்யப்பட்டுக் கொண்டி ருக்கிறது. கடந்த 10ஆம் திகதி கூட்டப் பட்ட சம்பள நிர்ணய சபையை முதலா ளி ார் சம்மேளனம் புறக்கணித்தமையா னது, முழு மலையக மக்களையும் புறக் கணித்தமைக்கு சமமாகும்.

இவ்வாறு தன்னிச்சையாக செயல்படு வதற்கு பெருந்தோட்ட கம்பனிகளுக்கு அதிகாரமளித்தது யார்? சம்பள விவகா ரம் குறித்து எமது பல சுற்று பேச்சுகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, தொழில் அமைச்சின் அதிகாரம் மிக்க அதிகாரியான தொழில் ஆணையாளர் நாயகம் சம்பள நிர்ணய சபையைக் கூட்டினார். தொழில் ஆணையாளரின் அறிவிப்பை முதலாளிமார் சம்மேளனம் சட்ட ரீதியாக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், அந்த அழைப்பும் புறக்க ணிக்கப்பட்டிருக்கிறது என்றால், எவரோ ஒருவர் முதலாளிமார் சம்மேளனத்துக்கு அதிகாரத்தை வழங்கியிருக்க வேண்டும். பெருந்தோட்டத் தொழிலாளர்களை கம்பனிகள் எந்தளவு கவனத்தில் கொள் கிறது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டும். தொழிலாளர்களின் தொழில் பிணக்குகளை பெருந்தோட்ட நிறுவனங்கள் எவ்வாறு கையாள்கின்றன என்பதும் இங்கு நிரூபணமாகிறது.

எனவே இவ்வாறு தான்தோன்றித் தனமாக செயற்படும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## 5ஆவது...

இடம்பெற்ற நேரமான ஞாயிற்றுக் கிழமை காலை 8.45 மணிக்கு சகல மத ஆலயங்களிலும் மணிகள் ஒலிக்க விடப்பட்டு மௌன அஞ்சலி செலுத்து மாறு கேட்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தல் ஏற் பாடுகள் குறித்து பேராயரின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷ ாந்த பெர்னாண்டோ தெரிவித்தவை வருமாறு,

ஐந்தவாது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் ஆராதனையுடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு அங்கிருந்து பிரார்த்தனை ஊர்வலம் ஆரம்பமாகும். இந்த ஊர்வலம் நீர் கொழும்பு - கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்தை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிய ளவில் சென்றடையும்.

இதைத் தொடர்ந்து காலை 8.40 மணிக்கு கொச்சிக்கடை புனித அந்தோ னியார் தேவாலயத்தில் நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமாகும்.

காலை 8.45 மணிக்கு சகல மத வழிபாட்டு தலங்களிலும் மணி ஒலிக்க விடப்படும். தொடர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படும்.

முற்பகல் 10.30 மணிக்கு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில் ஆராதனை கொச்சிக்கடை புனித அந் தோனியார் தேவாலயத்தில் நடை பெறும்.

தொடர்ந்து, பிற்பகல் 3 மணிக்கு நீர்கொழும்பு மரிஸ்டெல்லா பாட சாலை மைதானத்தில் நினைவேந்தல் பேரணி ஆரம்பமாகி கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் ஆலயத்தை சென்ற டையும். இந்தப் பேரணியில் ஆயர்கள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் பங்கேற்பர்.

தொடர்ந்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அனைத்து ஆயர்கள் தலைமையில் ஆராதனை நடைபெறும்.

இதைத் தொடர்ந்து, குண்டுவெடிப் பில் தேவாலயங்களில் உயிரிழந்தவர் களை "விசுவாசத்தின் சாட்சிகள்" என்று புனிதர்களாக பிரகடனப்படுத்தும் மக் கள் கையொப்பங்கள் சேகரிக்கப்பட்ட மனு கர்தினாலிடம் வழங்கப்படும்.

**பின்னணி**

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி காலை 8.30 - 9.15 மணிக்குள் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு என 3 தேவாலயங்களி லும் 3 நட்சத்திர விடுதிகளிலும் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதல்களில் 39 வெளிநாட்டவர்கள் உட்பட 253 பேர் உயிரிழந்தனர். 500இற்கும் மேற் பட்டவர்கள் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுதந்திர...

4ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்தார்.

இதனைப் பரிசீலித்த நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை முதல் நடை முறைக்கு வரும் வகையில் மைத்திரிபால தலைவராக நீடிக்கத் தடை உத்தரவு பிறப்பித்தது.

இதனிடையே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட வழக்கு விசாரணையில் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள் ளன என்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததை யும் மேற்கோள்காட்டி அவர் தலைவர் பதவியை வகிப்பதற்கான தகுதியை இழந்துள்ளார் எனவும் குற்றம் சுமத்தப் பட்டது.

மேலும், மைத்திரிபால சிறிசேன தனக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணையை மீறி நல்லாட்சி அரசாங்கத் தில் பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவை சட்டவிரோதமாக பதவியிலிருந்து விலக்கி பாராளுமன் றத்தில் பெரும்பான்மையற்ற பிரிவின ருக்கு பிரதமர் பதவியை வழங்க தீர்மா னித்ததன் மூலம் யாப்பை மீறியுள்ளார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டது.

மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்கும் போது, 140 ஆகக் காணப்பட்ட கட்சி உறுப் பினர்களின் எண்ணிக்கை தற்போது இரண்டாக குறைந்ததாகவும் மைத்திரி மீது கவலை வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், சிறீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன மீண்டும் தொடர்வாரா அல்ல து பதில் தலைவராக நியமிக்கப்பட் டுள்ள நிமால் சிறிபால டி சில்வா வசமாகுமா என்பதை தீர்மானிக்கவல்ல தாக இன்றைய வழக்கு அமையும். எது எப்படி இருப்பினும் இன்று வழங்கப் படும் தீர்ப்பே சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால பயணத்தைத் தீர்மானிக்கும் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu



# 35 ஆடுகள் திருடியவர் முல்லைத்தீவில் கைது!

முல்லைத்தீவு, ஏப். 18

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவுப் பகுதியில் உள்ள ஆட்டு மந்தையொன்றில் இருந்து 35 ஆடுகளை கும்பலொன்று திருடிச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினமான நேற்று முன் தினம் குறித்த ஆட்டு மந்தையில் பாதுகாப்புப் பணியில் இருந்த இருவரைத் தாக்கிவிட்டு கும்பலொன்று சுமார் 9 லட்சத்து 35ஆயிரம் ரூபாய் பெறுமதியான 35 ஆடுகளைத் திருடிச் சென்றுள்ளது.

இந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கான இருவரில் ஒருவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் வற்றாப்பளைப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து 15 ஆடுகள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் இது குறித்த மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சு.கவை ஐ.தே.கவுடன் இணைப்பதற்குச் சதி!

## துஷ்மந்த மித்ரபால குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 18

சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்கு சிலர் சூழ்ச்சி செய்தாலும் அந்த க்கட்சி ஆதரவாளர்கள் இடமளிக்கமாட்டார்கள் என்று சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

சுதந்திரக் கட்சிக்கு இது சவால் மிகு வருடமாகும். தேர்தல்கள் நடைபெறவுள்ளன. எனவே, சூழ்ச்சிகளுக்கு அடிபணியாது கட்சியை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

சுதந்திரக்கட்சியை யானை வாலுடன் முடிச்சு போடுவதற்கு சிற்சில குழுக்கள் முற்பட்டாலும் அக்கட்சி ஆதரவாளர்கள் அதற்கு இடமளிக்கமாட்டார்கள் - என்றார். (அ)

# ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஏப். 18

நிவித்திகல பொலிஸ் பிரிவிற்குற்பட்ட கரவிட்ட ஆற்றிற்கு அருகில் உள்ள நீரியெல்ல பாலத்திற்கு அருகிலிருந்து சந்தேகத்திற்கிடமான முறையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது நபராவார்.

கடந்த 14 ஆம் திகதி அன்று உயிரிழந்தவரது வீட்டுக்குச் சென்ற அவரது நண்பரொருவர் அவரை வெளியே அழைத்துச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரது சடலம் இரத்தினபுரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிவித்திகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குழந்தை மீது கத்தியை வைத்து மிரட்டி நகை, மோட்டார் சைக்கிள் கொள்ளை!

## வவுனியா நகரப் பகுதியில் சம்பவம்

வவுனியா, ஏப். 18

**வவுனியா நகரில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணை வழிமறித்து அவரின் குழந்தை மீது கத்தியை வைத்து தாயார் அணிந்திருந்த நகைகளை மிரட்டிப் பறித்த கொள்ளையர்கள், அவர் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.**

குறித்த சம்பவம் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்பாகவுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு செல்லும் வீதியில் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண்மணி கடவுச்சீட்டு காரியாலத்துக்கு முன்பாக விண்ணப்படிவம் நிரப்பும் தொழிலில் ஈடுபட்டு வருபவர். அவர் நேற்றையதினம் அதிகாலை தனது தொழில் நிமித்தம் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிமனை முன்பாக வுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு மோட்டார் சைக்கிளில் தனது குழந்தையுடன் சென்றார்.

இவ்வாறு சென்றுகொண்டிருந்தவேளை வீதியில் மறைந்து நின்ற முகமூடியணிந்த மூவர் குறித்த மோட்டார் சைக்கிளை வழிமறித்து குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி அந்தப் பெண் அணிந்திருந்த நகைகளை பறித்ததுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் அபகரித்துக்கொண்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் வவுனியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# பூனை விவகாரத்தில் நீதிபதியை தாக்கிய பொலிஸ் உபபரிசோதகர்

## பார்த்துக் கொண்டிருந்த மனைவி அதிர்ச்சியில் மரணம்

கொழும்பு, ஏப். 18

தென் மாகாணத்தில் கடமையாற்றும் மாவட்ட நீதிபதி ஒருவரின் மனைவி, பூனை தொடர்பான தகராறு காரணமாக பொலிஸ் உப பரிசோதகரான தனது சகோதரர் தனது கணவரைத் தாக்கியதைத் தொடர்ந்து அதிர்ச்சியடைந்த நிலையில் மாரடைப்பால் உயிரிழந்தார்.

மாவட்ட நீதிபதி தாக்கப்பட்டமை தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் அக்மீமன பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பில் பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணையின்போது அதிர்ச்சியடைந்த மாவட்ட நீதிபதியின் மனைவி மாரடைப்பால் உயிரிழந்துள்ளதாக அக்மீமன பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய சப்-இன்ஸ்பெக்டரின் சகோதரியை மாவட்ட நீதிபதி திருமணம் செய்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த மாவட்ட நீதிபதி தனது மனைவியுடன் ஏப்ரல் 13 ஆம் திகதி புத்தாண்டுக்காக தனது மனைவியின் தாயார் வசிக்கும் காலியில் உள்ள வீட்டுக்கு சென்றிருந்தார். அவர்கள் தங்கள் செல்லப் பூனையையும் உடன் அழைத்துச் சென்றுள்ளனர்.

புத்தாண்டைக் கொண்டாடிவிட்டு, ஏப்ரல் 14ஆம் திகதி இரவு வீடு திரும்பத் தயாராகி விட்டனர். ஆனால் அவர்களால் வீட்டில் வளர்க்கப்பட்ட பூனையை கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது வீட்டில் பூனை இல்லாததால் நீதிபதி, அவரது மனைவி மற்றும் உறவினர்கள் பூனையை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

பூனையைத் தேடும் போது நீதிபதிக்கும் அவரது மைத்துனருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதால் சப்-இன்ஸ்பெக்டரான மைத்துனர், நீதிபதியை அறைந்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

மாவட்ட நீதிபதி அக்மீமன பொலிஸாருக்கு அறிவித்து முறைப்பாடு செய்திருந்தார். அதன்படி, இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட பொலிஸ் குழு அந்த இடத்திற்குச் சென்றது, விசாரணையின்போது, அதிர்ச்சியில் இருந்த நீதிபதியின் மனைவி நெஞ்சுவலி இருப்பதாக புகார் அளித்துள்ளார். முறைப்பாட்டை பதிவு செய்த பின்னர், அவரை காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகக் கூறி மருத்துவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்ததாகவும், சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்ததாகவும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அவருக்கு 45 வயது என்றும் அந்த அதிகாரி கூறினார். (அ)

# இளம் குடும்பஸ்தர் ஒருவரை வவுனியாவில் காணவில்லை

வவுனியா, ஏப். 18

வவுனியா வேப்பங்குளம் மெதடிஸ்த தேவாலய வீதியில் தற்காலிகமாக வசித்து வந்த இளம் குடும்பஸ்தரை கடந்த 12 ஆம் திகதி முதல் காணவில்லை என மனைவியால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதிவுத் திருமணம் செய்து ஒரு மாத காலமான நிலையில் குறித்த குடும்பத்தினர் தற்காலிகமாக மேற்குறிப்பிட்ட முகவரியில் வசித்து வந்தனர். கடந்த 12 ஆம் திகதி மனைவியை அவரது பணித்தளத்தில் இறக்கி விட்டு தான் தனது பணிக்குச் செல்வதாக கூறிவிட்டுச் சென்றவர் மீண்டும் வரவில்லை என மனைவி தெரிவித்துள்ளார்.

25 வயதுடைய வில்வராசா ரக்சன் என்பவரே காணாமல் போனவராவார். குறித்த நபரை அடையாளம் காண்பவர்கள் 0741822912 குறித்த தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அறிவிக்குமாறு மனைவி கேட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 4,000 பொலிஸார் இவ்வருடம் ஓய்வு

கொழும்பு, ஏப். 18

வருடாந்தம் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பொலிஸ் சேவையை விட்டு வெளியேறும்போது புதிதாக ஐநூறு பேரை மட்டும் இணைப்பதற்கு அனுமதியளிப்பதன் மூலம் பொலிஸ் திணைக்களம் பாரிய சிக்கலை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாதாந்தம் 100 தொடக்கம் 150 இராஜினாமாக்கள் மற்றும் பணி இடைநிறுத்தங்கள் பதிவாகுவதாகவும் இந்த வருடத்தில் சுமார் 4,000 பேர் ஓய்வு பெறப் போவதாகவும் பொலிஸ் மா அதிகாரிகளின் கலந்துரையாடலில் தெரிய வந்துள்ளது.

புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், பொலிஸார் சேவையை விட்டுச் செல்வதைத் தடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பொறுப்பான அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (அ)

# மன்னார் துறைமுக நில எல்லைகளை திருத்தியமைப்பதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, ஏப். 18

மன்னார் துறைமுகத்தின் நில எல்லைகளை திருத்தியமைக்க துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி எல்லைகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் கே.டி.எஸ்.ருவன்சந்திர குறிப்பிட்டார்.

அதன்படி, திருத்தப்பட்ட எல்லைப்பகுதிகளை வர்த்தமானியில் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னதாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எல்லைக்குள் மன்னார் கடற்படைத்தளமும் உள்ளடங்கியுள்ளதாக செயலாளர் குறிப்பிட்டார்.

புதிய வர்த்தமானியில் அது தவிர்க்கப்பட்டு துறைமுக வரம்புகள் குறிக்கப்படவுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பட்லர் அபார ஆட்டம் ஆர். ஆர். திரில் வெற்றி



கொல்கத்தா, ஏப். 18

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 31 ஆவது லீக் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் விளையாடின. இதில் 2 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வெற்றி பெற்றது. 224 ஓட்டங்களை விரட்டிய அந்த அணிக்கு தனி ஒருவரான இறுதிவரை நிலைத்து நின்று போராடி வெற்றியைத் தேடித் தந்தார் ஜாஸ் பட்லர். அவர் 55 பந்துகளில் சதம் விளாசினார்.

கொல்கத்தாவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 223 ஓட்டங்கள் குவித்தது. சுனில் நரைன் அதிரடியாக விளையாடி சதம் விளாசினார். ரகுவன்ஷி 18 பந்துகளில் 30 ஓட்டங்கள் எடுத்தார். ரிங்கு சிங் 9 பந்துகளில் 20 ஓட்டங்கள் சேர்த்தார். ராஜஸ்தான் பந்து வீச்சாளர்களில் ஆவேஷ் கான் மற்றும் குல்தீப் சென் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

224 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி விரட்டியது. ஜெய்ஸ்வால் மற்றும் ஜாஸ் பட்லர் இணைந்து இன்னிங்ஸை ஆரம்பித்தனர். ஜெய்ஸ்வால் 19 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆர். ஆர். அணித் தலைவர் சஞ்சு சாம்சன் 12 ஓட்டங்களில் வெளியேறினார். அதிரடியாக விளையாடி 14 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்த ரியான் பராக், ஹர்ஷித் ராணா பந்துவீச்சில் வெளியேறினார்.இதேவேளை, பராக்குடன் 50 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தார் பட்லர்.

துருவ் ஜ/ரல் 2, அஸ்வின் 8 என சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க ஹெட்மயர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெறியேறி அதிர்ச்சி கொடுத்தார். பவல் 13 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். போல்ட் ஓட்டம் எடுக்க முற்பட்டபோது ஆட்டமிழந்தார்.

ஒரு பக்கம் விக்கெட்கள் சரிந்த போதும் ஜாஸ் பட்லர் நிலையாக நின்று நம்பிக்கை கொடுத்தார். இறுதி இரண்டு ஓவர்களில் ராஜஸ்தான் அணியின் வெற்றிக்கு 28 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 19 ஆவது ஓவரில் 19 ஓட்டங்கள் எடுத்தார் பட்லர். கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட அந்த ஓவரை வருண் சக்கரவர்த்தி வீசினார்.

பட்லர் 98 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இறுதி ஓவரின் முதல் பந்தில் சிக்ஸர் விளாசினார். 55 பந்துகளில் சதம் கடந்தார். இருந்தும் அடுத்த 3 பந்துகளில் ஓட்டம் ஏதும் எடுக்கவில்லை. 5 ஆவது பந்தில் 2 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது. இதன் மூலம் இரு அணியின் ஓட்டமும் சமனானது. இறுதிப் பந்தில் ஒரு ஓட்டம் எடுத்து ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது.

தனி ஒருவனாக இறுதிவரை பொறுமையுடன், பதற்றம் கொள்ளாமல் இன்னிங்ஸை அணுகிய பட்லர் ராஜஸ்தான் அணியின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றினார்.

(எ)



## டோனி, கோலி வழியில் பயணிக்கிறார் பட்லர்

கொல்கத்தா, ஏப். 18

முடியும் என்ற நம்பிக்கை தான் இந்த ஆட்டத்தில் மிகவும் முக்கியமானதாக அமைந்தது. ரிதம் கிடைக்காமல் தவித்த போது “அமைதியாக இரு, தொடர்ந்து முன் செல்” என்பதை எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். இதற்கு முன்பு டோனி, கோலி போன்ற வீரர்கள், நம்பிக்கையுடன் இறுதி வரை களத்தில் நின்று விளையாடியதை பலமுறை நாம் பார்த்துள்ளோம். அதைத் தான் நானும் செய்ய முயன்றேன்.- இவ்வாறு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வீரர் ஜாஸ் பட்லர் தெரிவித்தார்.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் தனது 7 ஆவது சதத்தை பதிவு செய்த பட்லர், ஆர். ஆர். அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். கொல்கத்தா அணிக்கு எதிராக நடந்த போட்டியில் முதல் 6 ஓவர்களில் 12 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு 20 ஓட்டங்கள் எடுத்திருந்தார் பட்லர். இதேவேளை, 7 முதல் 14 ஆவது ஓவர்கள் வரையில் 21 பந்துகளில் 22 ஓட்டங்களை எடுத்தார். கடைசி 6 ஓவர்களில் 27 பந்துகளை எதிர்கொண்டு 65 ஓட்டங்கள் குவித்தார்.

“பெரிய இலக்கை விரட்டும் போது விக்கெட்டை இழக்காமல் அணியை வெற்றி பெறச் செய்தது திருப்தியளிக்கிறது. நெகட்டிவ் எண்ணங்கள் எப்போது வந்தாலும் அதற்கு முற்றிலும் நேர்மாறாக நான் எண்ணுவது வழக்கம். அதுதான் என்னைக் களத்தில் தொடர்ந்து முன்னே செல்ல வைக்கிறது”- என்றார் ஆட்டநாயகன் விருது பெற்ற பட்லர். (எ)

## கேண்டிடேட்ஸ் செஸ் தொடர் இந்தியா - ரஷ்யா முதலிடம்




டொரண்டோ, ஏப். 18

கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் இந்தியாவின் குகேஷ், ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்சி முதலிடத்தில் உள்ளனர்.

பிடே கேண்டிடேட்ஸ் செஸ் தொடர் கனடாவிலுள்ள டொரண்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதன் 10 ஆவது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டர்களான ஆர்.பிரக்ஞானந்தா, விதித் குஜராத்தி ஆகியோர் நேருக்கு நேர் மோதினர்.

இந்த ஆட்டம் 39 ஆவது காய் நகர்த்தலின் போது சமநிலையில் முடிவடைந்தது. ரஷ்ய கிராண்ட் மாஸ்டரான இயன் நெபோம்னியாச்சி, இந்தியாவின் டி.குகேஷ் மோதிய ஆட்டம் 40 ஆவது காய் நகர்த்தலின் போது சமநிலையானது.

அஜர்பஜான் கிராண்ட் மாஸ்டரான நிஜாத் அபாசோவ், அமெரிக்க கிராண்ட் மாஸ்டரான ஹிகாரு நகமுராவுடன் மோதினார். இதில் 58 ஆவது காய் நகர்த்தலின் போது ஹிகாரு நகமுரா வெற்றி பெற்றார்.

இதேபோன்று, அமெரிக்க கிராண்ட் மாஸ்டரான பேபியானோ கருணா 47 ஆவது காய் நகர்த்தலின் போது பிரான்ஸ் கிராண்ட் மாஸ்டரான அலிரேசா ஃபிரோஸ்ஜாவை வீழ்த்தினார்.

இந்நிலையில், 10 சுற்றுக்களின் முடிவில் இயன் நெபோம்னியாச்சி, குகேஷ் ஆகியோர் தலா 6 புள்ளிகளுடன் முதலிடத்தை பகிர்ந்து கொண்டுள்ளனர்.(எ)

## “கசப்பான மாத்திரை போன்றது”
### தோல்வியால் ஸ்ரேயஸ் புலம்பல்



கொல்கத்தா, ஏப். 18

இந்தத் தோல்வியை ஜீரணிக்க முடியவில்லை. கசப்பான மாத்திரை போன்று இருக்கிறது. பரபரப்பான இந்தப் போட்டியில் வீரர்களின் உணர்ச்சித் தருணங்கள் மாறி மாறியிருந்தன. இந்த நிலை ஏற்படும் என்று நான் கொஞ்சம் கூட நினைக்கவில்லை. கிரிக்கெட் உண்மையிலேயே கணிக்க முடியாத விளையாட்டாகும். - இவ்வாறு கே. கே. ஆர். அணித் தலைவர் ஸ்ரேயஸ் ஐயர் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா அணி இரண்டாவது தோல்வியைத் தழுவியது. 223 ஓட்டங்கள் குவித்தும் வெற்றி பெற முடியாமல் தோற்றதால் கொல்கத்தா அணித் தலைவர் ஸ்ரேயஸ் ஏமாற்றமடைந்துள்ளார்.

தோல்வி குறித்து அவர் கூறியதாவது: இந்த ஆட்டத்தில் நாங்கள் சரியான முறையில் தான் பந்து வீசினோம். கொஞ்சம் தவறினால் கூட துடுப்பாட்ட வீரர்கள் பந்தை மைதானத்துக்கு வெளியே அனுப்பி விடுகிறார்கள்.

நல்ல வேளையாக இந்தத் தோல்வி எங்களுக்கு இப்போதே கிடைத்து விட்டது. முக்கியமான நேரத்தில் தோல்வியடைந்திருந்தால் அது கடினமாக இருக்கும். தவறுகளிலிருந்து நாங்கள் கற்றுக்கொண்டு வலுவாக மீண்டு வருவது முக்கியம்.

சுனில் நரைன் கொல்கத்தா அணியின் விலை மதிக்க முடியாத சொத்து. அவரால் போட்டியை எப்படி வேண்டுமானாலும் மாற்ற முடியும். - என்றார் ஸ்ரேயஸ் ஐயர். (எ)

## ஆர். சி. பி.மீது மகேஷ் பூபதி கடும் அதிருப்தி



டில்லி, ஏப். 18

ஆர். சி. பி. அணி மீது கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார் முன்னாள் இந்திய டென்னிஸ் வீரர் மகேஷ் பூபதி. நடப்பு ஐ. பி. எல். தொடரில் 7 போட்டிகளில் 6 போட்டிகளில் தோல்வியடைந்திருக்கும் அணியைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி ஆர். சி. பியை அடித்து நொறுக்கியது. இதற்கு மேல் முடிந்தால் ஆர். சி. பியை வேறு யாரேனும் அடித்துப் பாருங்கள் என்று சவால் விடும் அளவுக்கு அந்த அடி. இந்த அடியிலிருந்து மீள ஆர். சி.பிக்கு நீண்ட காலம் பிடிக்கும்.

இந்நிலையில் ஆர். சி. பி. அணியை புதிய உரிமையாளர்களிடம் விற்றுவிட பி. சி. சி. ஐ. வழி செய்ய வேண்டும் என்று எக்ஸ் தளபக்கத்தில் முன்னாள் டென்னிஸ் நட்சத்திரம் மகேஷ் பூபதி பதிவிட்டுள்ளார்.

ஐ. பி. எல். கிரிக்கெட் இரசிகர்களின், ஏன் வீரர்களின் நலன் கருதியாவது றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை வேறு உரிமையாளரிடம் ஒப்படைக்க பி. சி. சி. ஐ. பலவந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனைய அணி கள் எவ்வாறு வெற்றிக்காக போராடும் ஒரு அணியாகச் செயல் படுகிறதோ அதேபோன்று ஆர். சி. பி. அணியையும் விளையாட்டு அணியாக மாற்றும் உரிமையாள உரிடம் விற்று விடுங்கள்.- என்று பதிவிட்டுள்ளார் மகேஷ் பூபதி.


(எ)

# இஸ்ரேல் மீதான ஈரான் தாக்குதல்:

# யாருக்கு வெற்றி? யாருக்கு தோல்வி?

**மஹ்மூத் எல்நாகர்**





இஸ்ரேல் மீதான ஈரானின் முதல் தாக்குதலை சில ஆய்வாளர்கள் "ஈரானுக்கு ஆதரவான ஒரு நகர்வு" என்று விவரிக்கின்றனர்.

இஸ்ரேலிய இராணுவத் தகவல்களின்படி, சனிக்கிழமை இரவு தெஹ்ரான் இஸ்ரேலை நோக்கி 300 க்கும் மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவியது.

டமாஸ்கஸில் தனது தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கான பதில் தாக்குதல் இது எனவும், இதில் தங்களது இலக்கை அடைந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளது ஈரான்.

ஏப்ரல் 1 ம் தேதி சிரிய தலைநகர் டமாஸ்கஸில் உள்ள அதன் தூதரகத்தின் மீது இஸ்ரேல் நடத்தியாக கூறப்பட்ட வான்வழித் தாக்குதலுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தது ஈரான். அந்த தூதரகத்தின் மீது இஸ்ரேல்தான் தாக்குதல் நடத்தியது என்று அது கூறவில்லை என்றாலும், அதுவே இந்த தாக்குதலின் பின்னணியில் இருப்பதாக நம்பப்படுகிறது.

**பெற்றதும் இழந்ததும்**

இஸ்ரேல் மீதான தாக்குதல் வெற்றி பெற்றுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது. ஆனால் ஈரானிய ஆய்வாளரும், லண்டனை தளமாகக் கொண்ட அரபு-ஈரானிய ஆய்வு மையத்தின் இயக்குநருமான அலி நூரி ஜடேவின் கூற்றுப்படி, இந்த தாக்குதல் ஈரானுக்கு எந்த முன்னேற்றத்தையும் கொடுக்கவில்லை. மாறாக, ஈரானிய ஆட்சியின் பலவீனத்தை காட்டியுள்ளது. காரணம், இஸ்ரேலுக்குள் எந்த இலக்குகளையும் தாக்கவில்லை" என்று கூறுகிறார் அவர்.

இது ஈரானில் உள்ள சில மக்களிடையே ஏளன மனநிலையை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் "உளவியல் போர்" என்று அழைக்கும் அந்த தாக்குதலை தொடர்ந்திருந்தால், இன்னும் நிறைய சாதித்திருக்கும் என்று நம்புகிறார் ஜடேஹ்.

டெல் அவிவ் பல்கலைக் கழகத்தில் உள்ள மோஷே தயான் மையத்தின் மத்திய கிழக்கு ஆய்வு ஆராய்ச்சியாளரான டாக்டர் எரிக் ருண்ட்ஸ்கி, இஸ்ரேல் தீவிரமான எச்சரிக்கை நிலையை அறிவித்ததன் மூலம் தோல்வியடைந்துள்ளதாக கூறுகிறார். இது இஸ்ரேலியர்கள் மத்தியில் பதற்றத்தை தூண்டிவிட்டதாகவும், இதுபோன்ற தாக்குதல்கள் மீண்டும் நிகழும் என்று இஸ்ரேலியர்கள் பலர் அஞ்சுவதாகவும் அவர் கூறுகிறார்.

இந்த தாக்குதலுக்கு பிறகு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தற்போது அதிக சக்தி வாய்ந்தவராக தன்னை உணர்கிறார் என்று ஜடேஹ் கூறுகிறார்.

சனிக்கிழமைக்கு முன்னர் பல தரப்பிலிருந்தும் கடுமையான விமர்சனங்களை பெற்றுக்கொண்டிருந்த இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகளுடன் வலுவான உறவுகளை மீண்டும் நிறுவிக்கொள்ள இந்தத் தாக்குதல் உதவியுள்ளது.

இந்த தாக்குதலால் இஸ்ரேலியர்களுக்கு சில ஆதாயங்கள் இருந்தாலும், வேறு வழிகளில் அவர்கள் சிலவற்றை இழந்ததாக இஸ்ரேலிய ஆய்வாளர் கூறுகிறார்.

இந்த தாக்குதல், மத்திய கிழக்கின் அதிகார இயக்கத்தை இஸ்ரேல் அங்கீகரிக்கத் தவறியதையும், ஈரான் அதன் எல்லைக்குள் தாக்குவதைத் தடுக்க முடியாத இயலாமையையும் நிரூபித்து விட்டதாக அவர் நம்புகிறார்.

**மீண்டும் நட்பு நாடுகளின் ஆதரவு**

இஸ்ரேலிய ஆராய்ச்சியாளர் எரிக் ருண்ட்ஸ்கியும் ஈரானின் தாக்குதலில் இஸ்ரேலுக்கு ஆதாயம் இருப்பதாக நம்புகிறார். பல மாத முரண்பாடுகளுக்கு பிறகு மீண்டும் தற்போது இஸ்ரேல் மேற்குலகத்தின் ஆதரவை பெற்று வருவதால், இது அரசியல் ரீதியாக ஒரு திருப்புமுனையாக அமையக்கூடும் என்று அவர் கூறுகிறார்.

திடீரென்று இந்த நாடுகளுடன் ஏற்பட்ட பதற்ற சூழலுக்கு பிறகு, மீண்டும் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுடன் உறவை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்கிறார் அவர்.

இதற்கு நேர்மாறாக, ஈரானிய ஆய்வாளர் அலி நூரி ஜடேஹ், தெஹ்ரான் அரசியல் ரீதியாக உள்நாட்டிலும் சரி, வெளியிலும் தோற்றுவிட்டதாக நம்புகிறார்.

அது அண்டை நாடுகளின் ஆதரவை இழந்துவிட்டதாகவும், எந்த நாடும் ஈரானோடு இல்லை என்றும் கூறுகிறார் அவர். அமெரிக்காவுடனான நேரடிப் போருக்கு ஈரானை இழுக்க சில தரப்பிலி



ருந்து முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

இரண்டு ஆய்வாளர்களும் இரு நாடுகளிலும் நிலவிவரும் உள்நாட்டு அழுத்தங்களை ஒப்புக்கொள்கின்றனர்.

இஸ்ரேலுக்குள் பெரும் கவலை நிலவுவதாக ருண்ட்ஸ்கி சுட்டிக்காட்டுகிறார். காஸாவில் உள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதில் சமீபத்திய முன்னேற்றம் எதுவும் இல்லாத நிலையில், உள்நாட்டு அரசியலிலும் பிரச்னைகள் நிலவி வருவதால் நாட்டிற்குள் கோபம் அதிகரித்து வருவதாக அவர் கூறுகிறார்.

மேலும், ஈரானிய உச்சபட்ச தலைவரான அலி காமேனியும் மக்களிடம் இருந்து மட்டுமின்றி, தனது ஆட்சியின் கீழ் உள்ள முக்கிய நபர்களிடமிருந்தும் கடுமையான அழுத்தத்தை எதிர்கொள்கிறார் என்றும் ஜடேஹ் நம்புகிறார்.

"அல்-குட்ஸ் படைப்பிரிவின் ஏழு தலைவர்களை இஸ்ரேல் கொன்ற பிறகு ஈரானிய புரட்சிகர ஆயுதப்படை காவல் படையிடம் இருந்து அழுத்தம் உள்ளது. அவர்கள் பழிவாங்கும் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வருகின்றனர்."

**ஈரானின் தீவிர எச்சரிக்கை**

பிபிசி அரபிக் சேவையிடம் பேசிய இராணுவ மற்றும் மூலோபாய நிபுணரும், பெய்ரூட்டில் உள்ள மூலோபாய ஆய்வுகளுக்கான மத்திய கிழக்கு மையத்தின் இயக்குநருமான லெபனானின் ஓய்வுபெற்ற ஜெனரல் ஹிஷாம் ஜாபர், "இந்த தாக்குதல் குறித்து ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், இது ஒன்றும் ஆச்சரியம் இல்லை என்பதே" என்று கூறியுள்ளார்.

இரண்டு வாரமாக நீடித்து வந்த "உளவியல் போர்" இஸ்ரேல் "அச்ச நிலையில்" இருந்த சமயத்தில் வான்வழித் தாக்குதலுக்கு வழிவகுத்தது என்று கூறுகிறார் அவர்.

இது உளவியல் மற்றும் பொருள் சேதத்தை ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிடுகிறார்.

ஈரானின் இந்த நடவடிக்கை, இஸ்ரேலுக்குள் எந்தளவு ஆழத்தை அடைய முடியும் என்பதை பார்க்கவும், இஸ்ரேலிய வான் பாதுகாப்பின் தயார் நிலையை சோதிக்கவும் அதன் திறனை நிரூபிக்கும் வகையில் ஈரான் அனுப்பிய "நெருப்புடன் கூடிய செய்தி" என்று விவரிக்கிறார் ஜாபர்.

சமீப காலமாக "மூலோபாய பொறுமை கொள்கை" என்று அழைக்கக் கூடிய கொள்கையை பின்பற்றி வருவதை தொடர்ந்து, இந்த தாக்குதல் ஈரான் அரசியல் ரீதியாக இழந்த கௌரவத்தை மீண்டும் பெற வழிவகுத்து கொடுத்துள்ளதாகவும் அவர் நம்புகிறார்.

இஸ்ரேலிய வான் பாதுகாப்பைக் குழப்புவதற்காக ஈரான் பெரிய எண்ணிக்கையிலான ட்ரோன்களை ஏவியது என்றும் லெபனான் இராணுவ நிபுணர் நம்புகிறார்.

இஸ்ரேலின் அயர்ன் டோமால் மட்டும் அனைத்து ஏவுகணைகளையும் தடுக்க முடியாது என்றும், மத்திய கிழக்கில் உள்ள தளங்களில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகளும் அதற்கு உதவ வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

(16ம் பக்கத் தொடர்ச்சி)



# கச்சதீவை மீட்க ஒரே வழி சர்வதேச நீதிமன்றமே!

## பழ. நெடுமாறன் சிறப்பு பேட்டி



**91** வயதிலும் தமிழ்த் தேசியத்துக்காகவும், ஈழத் தமிழர்களுக்காகவும் குரல் கொடுத்து அரசியல் களம் கண்டு வருகிறார் பழ. நெடுமாறன். மறைந்த பிரதமர் இந்திரா காந்தியால் என் மகன் எனவும், பெருந்தலைவர் காமராஜரால் மாவீரன் எனவும் அழைக்கப்பட்டவர். தமிழகத்தில் மீண்டும் பேசு பொருளாகியுள்ள கச்சத்தீவு விவகாரம் குறித்து அவர் அளித்த சிறப்பு நேர்காணல்.

**இந்தியா-இலங்கை கச்சத்தீவு உண்மையில் இப்போது யாருடையது? இதில் உண்மை நிலவரம் என்ன?**

ராமேசுவரம், கச்சத்தீவு மற்றும் 13 தீவுகள் தமிழகத்துடன் சேர்ந்திருந்த நிலப்பகுதிகள்தான். 1460-ஆம் ஆண்டு கடல் கொந்தளிப்பு ஏற்பட்டதில் சமுத்திரம் உள்ளே புகுந்து ராமேசுவரம், கச்சத்தீவு உள்ளிட்டவை தீவுகளாக உருமாறின. எனவே, ராமேசுவரம், கச்சத்தீவு ஆகியவை தமிழகத்தில் சேர்ந்திருந்த நிலப்பகுதிகளே என்பதை மறுப்பதற்கில்லை. தமிழகத்துடன் சேர்ந்திருந்த இந்தத் தீவுக் கூட்டங்கள் அனைத்தும் ராமநாதபுரம் ஜமீனுக்கு சொந்தமாக இருந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ராமநாதபுரம் ஜமீன் ஆட்சிக்குள்பட்டதாகவே இருந்த கச்சத்தீவானது குத்தகைக்கும் விடப்பட்டுள்ளது. அப்போதைய ராமநாதபுரம் ராஜா, குத்தகை விட்டதற்கான பத்திரங்கள் இன்னும் உள்ளன. எனவே, கச்சத்தீவு முழுக்க, முழுக்க தமிழகத்தைச் சேர்ந்தது.

**அதற்கான ஆவணங்கள் ஏதேனும் ராமநாதபுரம் ஜமீன் வசமோ, மாநில அரசு வசமோ உள்ளனவா?**

இந்தியாவிலிருந்து 12 கடல் மைல் தொலைவில் உள்ளது கச்சத்தீவு. இது 285 ஏக்கர் பரப்பளவு கொண்ட சிறிய தீவுதான். இங்கு முத்துக்குளிப்பு, மீன்பிடித் தொழில், சாயம் காய்ச்சுவதற்கான ஒரு வகை வேர்களை சேகரிக்கும் தொழில் உள்ளிட்டவை முன்பு பிரசித்தி பெற்றிருந்தன. இந்தத் தொழில்களுக்காக கச்சத்தீவானது குத்தகைக்கு விடப்பட்டது. அவ்வப்போது பதிவு செய்யப்படும் குத்தகைப் பத்திரங்கள் ராமநாதபுரம் டிவிஷனில் பதியப்பட்டுள்ளன. அரசின் பத்திரப் பதிவு அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை இன்றும் சரிபார்க்கலாம். மாநில அரசிடம் கேட்டுப் பெற முடியும்.

**பின்னர், கச்சத்தீவு விவகாரத்தில் தொடர்ந்து சர்ச்சை எழுவது ஏன்?**

1974-இல் அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கும், இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகவுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டில், இலங்கைக்கு சொந்தமான கச்சத்தீவு என்று குறிப்பிட்டிருந்ததை இந்திய அரசு ஏற்றுக் கொண்டுவிட்டது. நமக்குச் சொந்தமான தீவை இலங்கைக்கு கொடுத் துவிட்டார்கள் என்பதில்லை பிரச்னை. இலங்கைக்கு சொந்தமான கச்சத்தீவு என இந்தியா ஏற்றுக் கொண்டதுதான் பிரச்னை. அதுதான் இன்று வரையில் சர்ச்சையாகத் தொடர்கிறது.

**அப்போது மாநில ஆட்சியில் இருந்த திமுக அரசு இதைத் தடுக்கவில்லையா?**

இந்திய அரசும், இலங்கை அரசும் செய்துகொண்ட உடன்பாடு அது. மத்தியில் ஆளும் அரசானது அந்நிய நாடுகளுடன் உடன்பாடு செய்யும் பிரச்னையில் மாநில அரசு தனது ஆட்சேபணையைத் தெரிவிக்கலாம். நேரடியாகச் சண்டையிட முடியாது. இருப்பினும், நாடாளுமன்றத்தில் ஃபார்வர்டு பிளாக் கட்சியின் மூக்கையா தேவர், திமுகவைச் சேர்ந்த இரா. செழியன், நாஞ்சில் மனோகரன் ஆகியோர் கேள்விகள் எழுப்பி, கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். பின்னர், தமிழக சட்டப் பேரவையிலும் அனைத்துக் கட்சிகளால் விவாதிக்கப்பட்டு, தங்களது எதிர்ப்புகளை பேரவையில் பதிவு செய்துள்ளனர். அப்போதைய முதல்வர் கருணாநிதியும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததற்கான அதிகாரபூர்வ ஆவணங்கள் உள்ளன.

**கச்சத்தீவு விவகாரம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி தற்போது பேசுவது ஏன்?**

இந்தியாவில் பிரதமராக நேரு இருந்த காலம் தொடங்கி தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி காலம் வரையிலும் இலங்கையை தாஜா செய்து நமது பக்கம் வைத்துக் கொள்ளும் நடவடிக்கையைத்தான் எடுத்து வந்துள்ளனர். அதற்காக இலங்கை கேட்டது, கேட்காதது என அனைத்தையும் செய்து தருகின்றனர். நரேந்திர மோடி பிரதமராகி 10 ஆண்டுகளாகிறது. ஆனால், இப்போதுதான் பேசுகிறார். இதற்கு முன்னர் பாஜக இருமுறை ஆட்சியில் இருந்தது. அப்போது வாஜ்பாய் பிரதமராக இருந்துள்ளார். அப்போதும் கச்சத்தீவு மீட்புக்கான நடவடிக்கை இல்லை. தேர்தலுக்கு தேர்தல் கச்சத்தீவு குறித்து பேசுவதும், பின்னர் மறந்துவிடுவதும் வாடிக்கையான ஒன்றாக உள்ளது.

ஆர்.முருகன்

**கச்சத்தீவை மீட்பதற்கான சட்டபூர்வ வழி ஏதேனும் உள்ளதா?**

கச்சத்தீவை மீட்பதில் பாஜகவுக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் உண்மையில் அக்கறை உண்டு என்றால் சர்வதேச நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டும். அதில், நாங்கள் தப்பு செய்துவிட்டோம் தெரியாமல் கச்சத்தீவை கொடுத்துவிட்டோம் இப்போது, அதைத் திரும்பப் பெறுகிறோம் என இந்திய அரசு வாதிட வேண்டும். இந்திய அரசுதான் சர்வதேச நீதிமன்றத்துக்கு இந்த விவகாரத்தைக் கொண்டு செல்ல முடியும் மாநில அரசு ஒன்றும் செய்ய முடியாது.

**இதற்கு முன்னால் வேறு ஏதாவது நாடுகள் அதுபோல சர்வதேச நீதிமன்றத்தை நாடியிருக்கின்றனவா?**

ஜப்பான்-கொரியாவுக்கு இடையே ஏற்பட்ட கடல் பிரச்னைகளில் சர்வதேச நீதிமன்றத்துக்கு வழக்கு சென்றுள்ளது. இதேபோல, பல்வேறு நாடுகளுக்கு இடையே எழும் கடல் பிரச்னைகளில் சர்வதேச நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அரசுடன் இந்திய அரசு பேசுவதாலோ, இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வருவதன் மூலமோ கச்சத்தீவை திரும்பப் பெற முடியாது. சர்வதேச நீதிமன்றத்துக்கு செல்வதுதான் இந்தியாவுக்குள்ள ஒரே வழி. ●




# சர்வதேச அமைதி: நிலைநாட்டும் வழி!

இஸ்ரேல் மீது ஈரான் ஏப்ரல் 14 அன்று நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல், மத்தியக் கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு புதிய போருக்கான தொடக்கமோ என்கிற அச்சத்தை உலக நாடுகளிடையே ஏற்படுத்தியுள்ளது. சிரியாவில் உள்ள தங்கள் துணைத் தூதரகத்தில், ஏப்ரல் 1 அன்று நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இஸ்ரேலைக் குற்றம்சாட்டிவந்த ஈரான், அதற்குப் பதிலடியாக இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

விஷயம் இப்போதைக்கு முடிவுக்கு வந்தாலும், 'இஸ்ரேல் திருப்பித் தாக்கினால், பெரும் பலத்துடன் திருப்பியடிப்போம்' என அந்நாடு சூளுரைத்திருக்கிறது. இஸ்ரேல் நிச்சயம் திருப்பித் தாக்கும் என்பதை ஈரான் அறிந்திருக்கிறது என்றாலும், நிழல் யுத்தத்திலிருந்து வெளியே வந்து நேரடியான போருக்கு அந்நாடு தயாராகிவிட்டது என்பதையே இத்தாக்குதல் உணர்த்துகிறது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஆறு மாதங்களைத் தாண்டி தொடரும் நிலையில், வரலாற்றில் முதல் முறையாக இஸ்ரேல் மீது நேரடித் தாக்குதலை நிகழ்த்தியிருக்கிறது ஈரான்.

பாலஸ்தீனர்களின் இன அழிப்புக்கு மேற்குலகின் நிபந்தனையற்ற ஆதரவு இஸ்ரேலுக்கு எரிபொருளாக அமைகிறது. ஐ.நா. எவ்வளவு முயன்றும் இதுவரை போர்நிறுத்தத்துக்கு இஸ்ரேல் முன்வரவில்லை. காசாவின் 23 லட்சம் மக்கள்தொகையில் 90 வீதம் பேர் இடப்பெயர்வுக்கு உள்ளாகியிருக்கின்றனர். கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 33,000 ஐக் கடந்துவிட்டது.

சர்வதேச அளவில் எழுந்திருக்கும் எதிர்ப்புகளுக்கு இடையிலும் இஸ்ரேலின் தாக்குதல் இலக்கு காசாவைத் தாண்டி சிரியா, லெபனான் என நீண்டு கொண்டே செல்கிறது. இஸ்ரேல் மீதான ஹமாஸின் அக்டோபர் 7, 2023 தாக்குதலைத் தொடர்ந்து மேற்கு ஆசியா - மத்தியக் கிழக்குப் பகுதியில் எழுந்த புவி அரசியல் நெருக்கடி, பிராந்தியப் போராக மாறிவிடாமல் தடுப்பதற்கான நடவடிக்கையாக அமெரிக்கா எல்லா விதமான ஆதரவையும் இஸ்ரேலுக்கு வழங்கிவந்தது. எனினும், ஜெனீவா உடன்படிக்கை, வியன்னா உடன்படிக்கை உள்ளிட்ட சர்வதேச உடன்படிக்கைகளை மதிக்காமல் தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்கள், நிலைமையை மேலும் சிக்கலாக்கியிருக்கின்றன.

ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட போர் நிறுத்தத் தீர்மானங்களை மேற்குலகின் உதவியுடன் முறியடித்துவந்த இஸ்ரேல், ஈரானின் தாக்குதலைத் தொடர்ந்து ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சிலில் அவசரக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. இது இஸ்ரேலின் இரட்டை நிலைப்பாட்டை மட்டுமல்லாமல், ஈரானின் தாக்குதலைக் கண்டித்திருக்கும் மேற்குலகின் இரட்டை நிலைப்பாட்டையும் மீண்டும் ஒரு முறை அம்பலப்படுத்தியிருக்கிறது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூவின் பிடிவாத அணுகுமுறை, அமெரிக்காவை அதிருப்தியில் ஆழ்த்தியிருக்கிறது. ஒரு பெரும் சண்டைக்கு அமெரிக்காவை இழுத்துவிட நெதன்யாஹூ முயற்சிப்பதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கவலை தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டத்தில் உரையாற்றிய பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டர்ஸ், "அமைதியை நிலைநாட்ட வேண்டிய கூட்டுப் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. அது பிராந்திய அமைதியாக இருக்கட்டும் அல்லது சர்வதேச அமைதி, பாதுகாப்பாக இருக்கட்டும். ஆனால் அந்தக் கூட்டுப் பொறுப்பு இப்போது குறைத்து மதிப்பிடப்படுகிறது. இந்தத் தருணத்தில் மத்தியக் கிழக்குப் பிராந்தியமோ இந்த உலகமோ இன்னொரு போரைத் தாங்காது" எனப் பேசியிருக்கிறார்.

இஸ்ரேலின் பிடிவாதம் முடிவுக்கு வராமல் மத்தியக் கிழக்கில் அமைதி திரும்புதல் சாத்தியமில்லை மத்தியக் கிழக்கை நோக்கிய மேற்குலகின் அயலுறவில் மாற்றம் ஏற்படாமல், சர்வதேச அமைதியும் சாத்தியமில்லை. இந்த நிலைப்பாடுகளில் மாற்றம் வந்தால்தான் குட்டர்ஸ் வலியுறுத்தும் கூட்டுப் பொறுப்பு அர்த்தம் பெறும்! ●

# இஸ்ரேல் மீதான ஈரான் தாக்குதல்:...

(14ம் பக்கத் தொடர்ச்ச)

இஸ்ரேல் ராணுவ ரீதியாக பதிலடி தாக்குதல் நடத்த நினைத்தால், அதனுடைய ஏவுகணையை கொண்டு ஈரானின் முக்கிய நகரத்திற்குள் தாக்குதல் நடத்த முடியும். ஆனால், அதற்கு ஈரான் கொடுக்கும் பதில் தாக்குதலின் காரணமாக அதனால் அதற்கு மேல் முன்னேற முடியாது என்கிறார் ஜாபர்.

மேலும், “இஸ்ரேலிய விமானங்களால் ஈரான் மீது துல்லியமாக குண்டு வீச முடியும். ஆனால் அவை ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ள அரபு நாடுகளின் மீது பறக்க வேண்டும் அல்லது அமெரிக்கா அனுமதிக்க மறுக்கக் கூடிய அதன் இராணுவ தளங்களில் இருந்து புறப்பட வேண்டும்” என்கிறார் அவர்.

போக்கை மாற்றுதல் மற்றும் நம்பிக்கையை மீட்டெடுத்தல்

லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸின் சர்வதேச உறவுகளுக்கான பேராசிரியர் ஃபவாஸ் கெர்ஜஸ், ஈரானுடன் ஒப்பிடும் போது இந்த தாக்குதல்களினால் இஸ்ரேலே அதிக லாபம் ஈட்டியுள்ளது என்று வாதிடுகிறார்.

ஈரானின் தாக்குதல்கள் இஸ்ரேலில் குறிப்பிடத்தக்க சேதத்தையோ அல்லது உயிரிழப்புகளையோ ஏற்படுத்தவில்லை என்றும், தற்போது முழு மேற்கு நாடுகளும் இஸ்ரேலை ஆதரிக்கின்றன என்றும் அவர் விளக்குகிறார்.

ஆயுதங்கள், உளவுத்துறை ஒத்துழைப்பு மற்றும் நிதியுதவி ஆகியவற்றின் அடிப்படையில் இஸ்ரேலுக்காக மேற்கத்திய ஆதரவைத் திரட்ட அமெரிக்கா முயற்சிப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

இஸ்ரேலுக்காக ஆதரவைத் திரட்டுவதற்கு ஜி7 நாடுகளின் அவசர உச்சிமாநாட்டிற்கு அழைப்பு விடுத்ததன் மூலம், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அந்நாட்டை பாதிக்கப்பட்ட நாடாக சித்தரிக்கிறார் என்று கெர்ஜஸ் கூறுகிறார்.



மேலும், “இதன் மூலம் காஸாவில் ஏற்பட்டுள்ள பேரழிவு மற்றும் கொடூரமான நிகழ்வுகளில் இருந்து தற்காலிகமாக கவனத்தை திசைதிருப்பிய பிறகு நெதன்யாகு அரசியல் ரீதியாக ஆதாயம் பெறுவார்” என்று கூறுகிறார் அவர்.

ஒரு காலகட்டத்தில் இந்நாடுகள் இஸ்ரேல் காஸாவில் “அட்டூழியம்” செய்துள்ளது என்று விமர்சித்து வந்த நிலையில், தற்போது மீண்டும் மேற்குலக நாடுகள் குறிப்பாக அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் இஸ்ரேலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கம், மீண்டும் அவர்களுடனான உறவை மேம்படுத்திக் கொள்ள உதவும் என்று குறிப்பிடுகிறார்.

**“இஸ்ரேலுக்கு மூலோபாய இழப்பு”**

ஆனால் கெர்ஜஸ் இஸ்ரேலுக்கு ஏற்படும் மூலோபாய இழப்பு குறித்தும் பேசுகிறார். அது நாட்டின் பாதிப்பை எடுத்துக்காட்டுவதாக அவர் குறிப்பிடுகிறார்.

இஸ்ரேலை எதிர்ப்பதற்கான தனது விருப்பத்தை அதன் மக்கள், நட்பு நாடுகள் மற்றும் எதிரிகளுக்கு நேரடியாக காட்டுவதன் மூலம் ஈரான் அரசியல் ரீதியாக ஆதாயம் அடைகிறது என்று அவர் கூறுகிறார்.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகள் ஈரானின் பல ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தியதன் மூலம், இஸ்ரேல் தனது மேற்குலக நட்பு நாடுகளின் உதவி இல்லாமல் தன்னைத் தானே தனியாளாக பாதுகாத்து கொள்ள முடியாது என்பது நிரூபணம் ஆகியிருப்பதாக நம்புகிறார் கெர்ஜஸ்.

சமீபத்தில் ஈரானுக்கு எதிரான தொடர்ச்சியான தாக்குதல்களில் இஸ்ரேலின் முக்கிய குறிக்கோளே, ஈரான் பலவீனமாக இருப்பதாகவும், மோதலை எதிர்கொள்ளத் துணியவில்லை என்றும் காட்டுவதே ஆகும். ஆனால், அவரை பொறுத்தவரை களத்தில் நடந்த தாக்குதல்கள் இந்த கருத்தை சிதைத்துவிட்டன என்று கூறுகிறார்.

இரு நாடுகளும் அடுத்தடுத்த நடவடிக்கைக்கு தீவிரமாக தயார் நிலையில் உள்ளதால், இந்த பகுதியே புயலுக்கான அறிகுறியுடன் காத்துக் கொண்டிருப்பதாக கூறுகிறார் அவர். மேலும் இப்பகுதி அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியாக விளிம்பில் இருப்பதாகவும் அவர் எச்சரிக்கிறார். ●

